ஞாயிறு வெளியீடு
ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3
இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு
REGD. No. M. 4643

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 28—4—46 | இதழ் 2

## இராம இராச்சியம்

(கைவல்யம்)

வாசகர்களே! வாலிபர்களே! இராமராச்சியத்தைப்பற்றி எழுதுவதாகச் சொன்னேன். எழுதுவதென்றால் மலைபோலச் சங்கதிகள் மனதில் குவிந்து விடுகின்றன. எதை எழுதுவது, எதைவிடுவது! எல்லாவற்றையும் உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்கிற ஆசையும் முன்னால் நிற்கிறது. கிழவயதின் சோர்வும் உண்டாகிறது. என் கற்பனையல்ல, கதையல்ல. ஏட்டிலுள்ளதும், எங்கும்நிறைந்துநிற்பதுமானதைமட்டும் எழுதினாலும் பலவியாசங்களாகும். அவைகள் பரீட்சைக்குப் படிப்பதல்ல. மண்டையிலேற்றி மறைத்து வைத்துப் பரீட்சைக்குஎழுதும் விடையுமல்ல. படித்து ஆலோசித்து உண்மையை உணர்ந்து நடக்கும் குணத்தில் பொருந்தவேண்டியவை. நாம் ஒன்று சேருவோம். மனம் ஒன்றுபட்டிடும். பெரியார் சொன்னவழி நல்ல வழி, நம்முடைய வழி நியாயமான வழி, அந்த வழி நம்மை எல்லாம் சரியான இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். பலகாலமாக நம்மிடையே வந்துசேர்ந்த பிழைபாடுகள்எல்லாம் ஓடிவிடும். நம்முடைய ஆண்மையை நசுக்கிப்பழிக்கிடமாக்கிய சமய, சாதிஆச்சாரங்கள் நமது பரஸ்பர அன்பினால் பறந்துவிடும். நம்மில் உயர்ந்தசாதி என்றும், ஆச்சாரிகளென்றும், அபிநயித்துக்கொண்டிருக்கும் குருக்கள், ஓதுவான், தேசிகன், பண்டாரம் முதலியவர்களைப் பார்ப்பன தாசி மக்களான சற்சூத்திரர்கள் என்று இராமாயணம் சொல்லும். அவர்கள்நம்முடன்சேரவோ, தோள்கோர்த்து நிற்கவோ வந்தாலும் வரட்டும். வாராவிட்டாலும் அவர்களிடம் துவேஷமோ, கோபமோ, வேண்டாம். நாம் போகும் வழியில்அவர்களுடையபாவனைகள் எல்லாம்மாண்டு மடிந்துபோகும். வீரர்களே உலகத்தில் பெரும் காரியங்களைச் செய்கிறார்கள். பயந்தவர்களும் உலகத்தில் இருப்பார்கள். கட்டையில் கோடாலிவெட்டு ஒரேஇடத்தில்விழவேண்டும். வெட்டுச்சிதறினால் கட்டை உடையாது, விறகுமாகாது. ஆனதால் ஒரே இடத்தில் எல்லோரும் அடிப்போம்.

இராமாயணம் உண்டானதற்கும், விஷ்ணு இராம அவதாரம் எடுத்ததற்கும் உள்ளமூலகாரணங்களைச்சொன்னேன். இப்பொழுது இராமாயணம் உண்மையாக உண்டானதையும், அதன் இராச்சிய பாரங்களையும் சொல்லுகிறேன். எல்லாம் கற்பனைக்கதைகள்தான். புத்திசாலிக்கூட்டம் மடையர்கூட்டத்தை அடக்கி ஆளச்செய்தவைகள்தான். ஆங்கிலம் படித்து பி.ஏ. பி. எல்., எம்.ஏ. எல்.டி., பரீட்சை கொடுத்துப்பல அறிவாளிகள் எழுதின ஆங்கிலப்புத்தகங்களையும்படித்துத்தமிழும்படித்துப்புலவர்களான நம் பெரிய பண்டிதர்களே மகா விஷ்ணுவும் இலட்சுமியும் வைகுண்டத்தில் பள்ளியறையில் படுத்துக்கொண்டதையும், விஷ்ணு, சூரன் மனைவியின் கற்பைஅழிக்கச் சிவபெருமான் தன் பராக்கிரமத்தைக்காட்டினார் என்பதையும் நம்பிப்பிரசங்கம் செய்கையில், அந்தக் காலத்து மக்கள் இராமாயணத்தை நம்பினதில் ஆச்சரியமில்லை. இராமாயணத்தைக் கற்பித்து, கவி இன்பம்கண்டும்,காவியப்பெருமை பேசியும், இராம இராச்சியநீதியை நிறுத்தியும் கண்டபலன் என்ன? முகமதியர் இராச்சியம் ஆயிற்று. ஒன்பதுகோடி முகமதியர்களை உண்டாக்கிற்று. ஆறுகோடிபேர்களைத் தீண்டாதவர்கள் என்று நிலை நிறுத்திற்று. மற்றவர்களை எல்லாம் சூத்திரர்கள் என்று முடிவு செய்துவிட்டது.

இராமாயணம் நடந்திருந்தால் தானே அதற்குக் காலம்சொல்லலாம். புராணக்கணக்கின்படி எழுதினகாலமும் சொல்லமுடியாது, என்றாலும் புத்தருக்குப்பின் எழுதப்பட்டது என்று சொல்லலாம். புத்தருடைய சங்கதிகள் இராமாயணத்தில் காணப்படுகின்றன, இராமர், காட்டில் பரதனைச்சந்திக்கும்போது பரதனுக்குஇராசநீதியை உபதேசிக்கையில் புத்தர்கள் திருடர்கள், அயோக்கியர்கள் அவர்களைச் சேர்க்காதே; ஊரில் வைக்காதே; துரத்திவிடு; என்று சொன்னதாக இராமாயணத்தில் காணப்படுகிறது. ஆனதால்பௌத்தருக்குப்பின் இராமாயணம் எழுதப்பட்டது. இராமரால் வெட்டப்பட்ட சம்புகன் பௌத்தன். எப்படியெனில், சூத்திரன்தவம் செய்யக்கூடாதென்பதுமல்ல, சூத்திரர்களுக்குத்தவம் என்பது உபதேசிக்கப்படவே இல்லை. புத்தமதத்தை அனுசரித்துத்தான் சம்புகன் காட்டில் தியானம் செய்தான்.

ஒருகாலத்தில் புத்தமதம் நமது நாடெல்லாம் பரவி இருந்தது. அப்பொழுது அசோக சக்கரவர்த்தி நமது நாட்டை ஆண்டு வந்தார். அவர் புத்தமதத்தை ஏற்றுத்தன் இராச்சியமெல்லாம் அதைப்பரப்பினார். சனங்களெல்லாம் அவரை வணங்கிப் புகழ்ந்தார்கள். அவர் இராச்சியத்தில் யாரும் பொய் சொன்னதில்லை. பெண்கள் எவரும் கற்புத் தவறி நடந்ததேகிடையாது என்று பல யாத்திரீகர்கள் எழுதியிருக்கிறார்கள், அப்பொழுது இந்து சமயம் என்கிற பிராமண வைதிக சமயம் க்ஷீணித்துப்போயிற்று. அதைப்புதுப்பிக்கப் பிராமணர்கள் இராமாயணம் எழுதினார்கள். "எங்களுக்கு இராமன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் விஷ்ணு அவதாரம். துஷ்டர்களைச் சிட்சிக்கப்பிறந்தான்" என்றுபலதும்எழுதினார்கள். காமலீலைகளைக் கடவுளே செய்தார் என்று புராணங்களில் எழுதிக்கோயில்களிலும் தேர்களிலும் அவைகளைச் சித்தரித்தார்கள். அந்தந்த நாட்டிலுள்ளபெரும்பண்டிதர்களைக்கொண்டு அவைகளை மொழி பெயர்த்தார்கள், பரப்பினார்கள், பாராயணம் ஆயிற்று, பக்தியாயிற்று, தெய்வமாயிற்று. கோயில் ஆராதனை, அபிஷேகச்சந்தனத்தை அர்ச்சகர்கள் சாதாரண பார்ப்பனர் மார்பில்பூசி அதே கையால் அதே சந்தனத்தைக்கலக்கிச்சற்சூத்திரர்களுக்கும்மடாதிபதிகளுக்குப் தீர்த்தப்பிரசாதம் என்று கொடுக்கும் வழக்கமும், வாங்கிக் கொள்ளும் பக்தியும் எதனால் உண்டாயிற்று, அதிலிருந்தே எல்லாப் பிச்சைக்காரர்களும் வாசலில்நின்று பிச்சைக்கேட்பார்கள். பிச்சைக்காரப்பார்ப்பனன், பார்ப்பனத்திகள் நம் நடுவீட்டுக்கு வந்து கேட்பார்கள். இராமாயணம்கொண்டுவந்துவிட்ட எல்லாவற்றையும் எழுத முடியாது, ஏட்டிலும் அடங்காது. நீங்களே ஆலோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

விஷ்ணு இராமராக அவதாரம் செய்து இராமாயணம் நடந்ததாகவே வைத்துக்கொள்வோம். விஷ்ணுவின் சரித்திரத்தில் ஏதேனும் ஒழுங்கு இருக்கிறதா? விஷ்ணுவிற்கு இல்லாததன்மை இராமருக்கு எப்படிவரும்? தெய்வங்கள், தேவர்கள், குரங்குகள், இராட்சதர்கள், ரிஷிகள் எல்லாம் சேர்ந்தல்லவா இராமராச்சியம்? அவர்களுடையது நமக்கு எப்படிப் பொருந்தும்? குரங்குகளோ, தேவேந்திரன், சூரியன், வாயு, பிரம்மா முதலியவர்களுக்குப் பிறந்தவைகள். இராம இராச்சியத்தை அவைகள் நிர்வகிக்கலாம். நமக்கு அந்தச்சக்தி உண்டா? அவைகளெல்லாம் அந்தராத்மாகூடப்பிறந்தவைகள்! நமக்குள் மகாத்மாகாந்தி ஒருவருக்குத்தான் அந்தராத்மா தெரியும். அந்த அந்தராத்மா கூட ஜின்னாவையும், வேவலையும் கண்டால் குட்டிக்கரணம்போடுகிறது. பலதேசத்தார்கள் படை எடுப்பால் நம் ஜனசமுகம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமா? அப்பொழுது இராமஇராச்சியமும் இராமபஜனையும் இல்லாமலா இருந்தது? அன்று முதல் இன்றுவரையும் அதுசெய்த காரியமன்றி அந்நியமதத்திற்கு அநேகரைப் போகும் படியாகச் செய்தது. அந்நியமதக் கூட்டத்தைப் பெருக்கிற்று. தீண்டப்படாதவர்கள் என்று நமக்கு முதுகெலும்பு போன்ற ஒரு பெரும் சமூகத்தைக்குகைக்குள் அடைத்து வைத்திருக்கிறது. வெளியே வரக்கூடாதென்று உத்தரவும் போட்டிருக்கிறது. அதிலிருந்து யாராவது தப்பித்தவறி தலையை நீட்டினால் அடி, உதை, குத்து என்கிற ஆக்கினை செய்யவும் சொல்கிறது. இராமா என்கிற மந்திரத்தையும், இராம இராச்சியத்தையும் அண்டமுகட்டுக்கு அப்பால் கூடப்புகழ்கிறார்கள். அதற்காக எழுதின ஏடுகளோ கணக்கில்லை. கட்டின கோயில்களோ பல. ஆராதனை, உண்டிகை, ஆச்சாரி, புரோகிதனுக்குப் போட்டசோறு, தட்சணை முதலியவைகளோ சொல்லி முடியாது. பலன் என்ன? உலகப் பொது விதியை உல்லங்கனம் செய்தது. உலகப்பொதுத் தெய்வத்தைமறைத்துத்தள்ளிப்போலித் தெய்வத்தைக் காட்டிக் குரங்கையும் பட்சியையும் தெய்வமாகக் கும்பிடச் செய்தது. குரங்கையும் பட்சியையும் கும்பிடும்தேசமில்லை. அவைகளுக்கு மோட்சமென்றும், சேவையென்றும், திருநாள்கொண்டாடும் ஜனங்களில்லை. அவைகளைத் தெய்வமாகக் காட்டிக் கொடுத்த, இராம இராச்சியத்தில் நாம் அடைந்தபலன், சர் இராமசாமி முதலியாரும் மற்றும் சிலரும் ஊர் ஊராகப் போய், வீடு வீடாக நுழைந்து "எங்கள் சனங்களுக்குச் சோறு இல்லை, நீங்கள் கொடுக்காவிட்டால் இலட்சக்கணக்கில் மாண்டு போவார்கள், மனம் இரங்குங்கள்" என்று கெஞ்சிப் பிச்சை வாங்கச் செய்தது.

வாசகர்களே! ஏட்டிலுள்ளதையும் அனுபவத்தில் இருந்ததையும் இருப்பதையுமே எழுதுகிறேன். மேல் வாரியாகப் படித்துத்தள்ளாமல் நன்றாய்ப்படித்து ஆலோசித்து அதன் உண்மையைத் தெரியுங்கள். வேதஸ்மிருதிகளால் மற்றச்சமுகங்களின் அறிவைத் தடுத்தார்கள். இராமாயணத்தால் அதைநிலைநிறுத்தினார்கள், ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் கோயில், சமயக் குருக்கள் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்படிந்திருந்ததனை வெட்டித் தன்மதிப்பைக் காக்கக் கற்றஜாதியாரே தலைதூக்கினார்கள் என்றும் சரித்திரம்பல படித்திருப்பீர்கள். இராம இராச்சியத்தைப்பின் பற்றின இராசாக்கள் அவ்வழியிற்செல்ல நினைத்தவர்களைஎல்லாம் கொன்றார்கள். எந்த நாட்டிலாவது தெய்வம் மனிதனாக அவதாரம்செய்து இராச்சியபாரம் செய்திருக்கிறதா? பலதேசத்தார்களுக்குமதுநாட்டின்பேரில்படை

## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 கெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## இராம இராச்சியம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

எடுக்க வெகுஆசை. இங்கிருக்கும் பெண், பொன் மற்றப்பொருள்களைக் கொள்ளை அடித்துக்கொண்டு போவதில் பரம்திருப்தி, அதுபோலவே நமக்குப்பல தெய்வலோகம். ஒவ்வொரு தெய்வலோகத்திலும், ஒவ்வொரு தெய்வம் அரசாட்சி செய்கிறது. நமதுநாட்டில் அவதாரம்செய்ய அவைகளுக்கு வெகு ஆசை. பெண், பொன்மற்ற எல்லாப்பொருள்களையும் அனுபவிப்பதில் பெரும்மகிழ்ச்சி. வைரநகை, பொன்னுப்பரணம், தந்தப்பல்லக்கு, தங்கவாகனம்,சதிர்,சங்கீதம்,வைப்பாட்டியுடன் பட்டணப்பிரவேசம், பள்ளியறை, பூநூல் கலியாணம், திருக்கலியாணம், சாந்தி கழிப்பு, திருஷ்டிப்போக்கு, தீட்டுக்கழித்தல், பால், பாயாசம், பஞ்சாமிர்தம், அக்காரஅடிசல், ஆறுகாலம் அமுதுபடைத்தல் இத்தனையும் இதற்குவேண்டிய சாமான்களும் ஆட்களும் தெய்வலோகத்தில் இல்லை. மலைவாசஞ்செய்ய ஆங்கிலேயர் நமது நாட்டை விரும்புவது போலத் தெய்வங்களும் அவதாரம் செய்து நமதுநாட்டுக்கு வந்துவிடுகின்றன. யாத்திரையாகவரும் ஆங்கிலேயர்கள் நமதுநாடு பூர்வீகநாகரிகமுடையதென்றும், வந்தவர்களை உபசரிப்பதில் மேம்பட்டவர்கள் என்றும் சொல்லிவிட்டுப் போனதாகப்பத்திரிக்கைகளில்காணப்படுவதுபோல், அந்தஅவதாரம்கடாட்சித்தது, இந்தஅவதாரம் கருணை காட்டியது என்று சாஸ்திரங்கள் சொல்லக்கேட்டுப்பண்டிதர்களும் சொன்னார்கள், அவைஇரண்டிலும் நமக்குப்பலன் ஒன்றே. எந்தத் தேவர்களாகஇருந்தாலும்மோட்சமடையப்பூலோகத்தில்பிறந்தே ஆகவேண்டுமென்று சாஸ்திரப்பண்டிதர்கள் சொல்வார்கள்.

சோழதேசத்து வைதிகப்பார்ப்பான் யாசகத்திற்குப் புறப்படுகையில், சந்திப்பவர்கள் எங்கேபோகிறீர்கள்என்றுகேட்டால்,முட்டாள்பய, சீமைக்குப்போகிறேன்என்று சொல்வார்களாம். அதுபோலஅன்னியதேசத்தார்களின் படைஎடுப்பும் தெய்வலோகத்துத் தெய்வங்களின் அவதாரங்களும் நம்மைப் பலதுன்பங்களுக்கு ஆளாக்கிவிட்டன. அந்த இரண்டு கொள்ளைக் கூட்டத்திற்கும், இராமாயணமும் இராம இராஜ்யமுமே காரணம். எப்படியெனில் ஆரியப்படை எடுப்பு இந்தியாவுக்கு வந்தவுடனே இங்குள்ள சமய, சாதி ஏற்பாடுகளைத் தெரிந்து கொண்டார்கள். க்ஷத்திரிய ஜாதிதான் சண்டைபோடும், மற்றஜாதிகள் சண்டை போடத் தெரியாது, பழகவில்லை; தீண்டப்படாத கூட்டம் தொட்டால் உண்ணப்படாது; ஒன்றாக உட்காரப்படாது என்கிற பல சூத்திரக்கூட்டர்; படைவருகிறது என்றுதெரிந்தாலே ஓடிப்போகிற பார்ப்பாரக்கூட்டம் ; இதனாலெல்லாம் சைனியம் குறைந்துபோயிற்று.நாம்நடத்தும் கொடுமையால் அநேகர் எதிரி பக்கம்போய்ச்சேர ஏதுவாயிற்று. கஜனிமகம்மது, சோமநாத படை எடுப்பிற்குப்பின் நமது நாட்டுச் சமுகஊழல்களையும், சாதிப்பிரிவினைகளையும் தெரிந்துகொண்டு பலதரம் படைஎடுத்தான். இந்துக்கள் ஒற்றுமையாகஇருக்கமுடியாது, அவர்களால் ஒன்றும்செய்ய முடியாது என்று பேபரும் சொன்னார். மலையாளத்தில் இராமாயண பக்தி அதிகம். இராம இராச்சியச் செங்கோல் உச்சநிலையை அடைந்திருந்தது. அதனால் ஒரு திப்புசுல்தான் அதைஜெயித்தான்.விஜயநகரஇராம இராச்சிய சின்னாபின்னம் செய்யப்பட்டுச் சீழிந்துமடிந்தது. தஞ்சாவூர் இராம இராச்சியம் துளசியை நம்பித்தொலைந்தது. இராமரும் அவருடைய பக்கபலமான குரங்கு, பட்சி, ஜீயர், மகந்து, பாகவதர் முதலிய சைனியங்களெல்லாம் நமது சோற்றைத்தின்று உயிரோடுதான் இருக்கின்றன. அவதாரங்களைப்பற்றி எழுத வேண்டுமானால், அநேகம் எழுத வேண்டும். தெய்வத்தின் இருப்பிடத்தில் ஆறு, குளம் இல்லையா? இருந்தால்நம்நாட்டில் அவதாரம்செய்து குளிக்கும் பெண்கள் சேலையைஎடுத்து மரமேறி அம்மணமாக வந்தால் கொடுப்பேன் என்று ஏன்சொல்லுகிறது? சிறைஎடுக்கவும் அங்கே வழியில்லையோ? இருந்தால்நம்நாட்டிற்குவந்து ஏன்சிறைஎடுக்கிறது?

அடுத்ததுஇராமஇராச்சியத்தைப் பற்றியே எழுதுகிறேன். எந்தப் பெரியவர்கள் சொன்னால் என்ன? எல்லோருக்கும் பொதுவில் இராமாயணம் இருக்கிறது. படிக்க நீங்களும் இருக்கிறீர்கள்.

---

## செல்லம்—ராஜு வாழ்க்கை ஒப்பந்தம்

19-4-46 வெள்ளிக்கிழமை காலை 7-30மணிக்கு ஈரோடு சரஸ்வதி ஹாலில்தோழர்சி. என். அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் பெரியாரின் முன்னவர் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களது இரண்டாவதுமகள்செல்லம் என்கிற நாகலட்சுமி,சேலம்தாதம்பட்டி மணியம்எம். மல்லநாயக்கர் மகன் எம். ராசுஆகிய இருவருக்கும்வாழ்க்கையொப்பந்தம் இனிது நடைபெற்றது.

பெரியார்ஈ வெ.ரா.,இரா.நெடுஞ்செழியன்,ஆசிரியர்சுந்தரவடிவேல் சேலம்சித்தையன் ஆகியோர்மணமக்களைப்பாராட்டியும் சீர்திருத்தத் திருமணம்பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அனைவருக்கும் நன்றிகூறினர்.

## பிறப்பு

விருதுநகர்த்தோழர் எ. கே. அருணசலம் அவர்களின் துணைவிக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்து "பன்னீர்செல்வம்" என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 1—0—0 தரப்பட்டது.

---

# குடந்தையில்

# தஞ்சை மாவட்ட மாநாடுகள்!

1946 மேமீ 18, 19, சனி, ஞாயிறு தேதிகளில் சர். பி. தியாகராயர் பந்தலில் நடைபெறும்

### 18-5-1946ல்

## திராவிடர் மாநாடு

★

தலைவர்: தோழர். என். அருச்சுனன் அவர்கள்
பழையகோட்டை.

திறப்பாளர்: தோழர். C. D. T. அரசு அவர்கள், சென்னை.

கோடியேற்றுபவர்: தோழர். S. R. சுப்ரமணியம்
அவர்கள், திருப்பூர்.

18—5—1946 சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் மாநாட்டின் பந்தலிலேயே

**"சந்திரோதயம்"**

என்ற நாடகம் தலைவர் **பெரியார்** அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இந்த நாடகத்தில்,குடந்தைத் தளபதிகளான தோழர்கள். வி. சின்னத்தம்பி, பி. ஆர் போன்னுசாமி, கே. கே. நீலமேகம், (மூவலூர்) தோழியர். எ. இராமாமிர்தத்தம்மையார், தோழர். ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்கள் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

### 19-5-1946ல்

## சுயமரியாதை மாநாடு

★

தலைவர்: தோழர். எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள்,
விருதுநகர்.

திறப்பாளர்: தோழியர். சத்தியவாணிமுத்துஅம்மையார், சென்னை.

கோடியேற்றுபவர்: தோழர். எ. சித்தையன் அவர்கள்,
சேலம்.

19—5—1946 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால்

**"சிவாஜி கண்ட இந்துராஜ்யம்"**

என்ற நாடகம் தஞ்சைத்தோழர் **பி. வேணுகோபால்,** B.A., B.L., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பெண் பிரதிநிதிகளுக்கு எல்லா வசதிகளும் மிக்க கவனமாகச் செய்யப்படுகிறது.

மாநாடுகளுக்குத் தீர்மானம் அனுப்ப விரும்பும் தோழர்கள்10—5—1946க்குள் தீர்மானங்களைவரவேற்புக் குழுச்செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமாய்க் கோரப்படுகிறார்கள்.

**மாநாடு—நாடகம் இரண்டிற்கும் கட்டண விகிதம் :—**
**போஷகர் ரூ. 100, ஆதரவாளர் ரூ. 25, வரவேற்பு அங்கத்தினர் ரூ. 10,**
**பிரதிநிதி ரூ. 5, பார்வையாளர் ரூ. 1.**

பெண் பிரதிநிதிகளுக்கு மாநாடு, நாடகங்கள், உணவு முதலியவற்றிற்கு எவ்வித கட்டணமுமில்லை.

கும்பகோணம்,
21-4-1946.

**வி. லெட்சுமிபதி,**
செயலாளர்,
வரவேற்புக்குழு.

சென்ற வாரத் தொடர்ச்சி:

# ★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

"ராதாவை, நான் பார்க்கவேண்டும். பழக வேண்டும்! தூய்மையாக நடந்துகொள்ளவேண்டும்! காதல் பிறக்கவேண்டும். கலியாணத்துக்குச் சம்மதிக்கவேண்டும். இந்தநிபந்தனைகளுக்கெல்லாம்நான் ஒப்புக்கொண்டால்மட்டுமே, அந்த விசித்திரமான கதையைக் கூறுவாய்! ஏன், நாகசுந்தரம்! அது தானே உன் கட்சி" என்று நான் கேட்டேன். "ஆமாம். இன்னும் ஒரு நிபந்தனை" என்றுநாகசுந்தரம் சொன்னான். "கதையையாரிடமும் சொல்லக்கூடாது, முக்கியமாக என் தகப்பனாரிடம் சொல்லக்கூடாது" என்றான். 'மேலும் மேலும் விந்தையாக இருக்கிறது" என்றேன் நான். "விசித்திரம்! விந்தை! விபரீதம்! என்று என்னவேண்டுமானாலும் சொல்லு, எனக்குக் கவலை எல்லாம், ராதா சுகப்பட வேண்டும்; என் தங்கையைக் கண்ணியம் தெரிந்தகாதலனிடம்ஒப்படைக்கவேண்டும் என்பதுதான்" என்றான். "என்னடா நாகு! திடீரென்று இப்படி ஒரு இலட்சியவாதிபோல, ஆவேசம் கொண்டவன்போலாகி விட்டாய். இவ்வளவு இலட்சியம்பேசும் உன்னையே கேட்கிறேன், விளையாட்டுக்கு அல்ல, உண்மையாகவே, ஒரு பெண்ணைப்பற்றிய கதையைத் தெரிந்துகொள்வதற்காக, அவளைக் கலியாணம் செய்துகொள்வதாக முன்கூட்டியேவாக்களிப்பது, எந்த இலட்சியத்துக்கு உகந்தது! கேட்டால்கூடச் சிரிப்பார்கள்!" என்றேன். நாகசுந்தரம் என்தோள் மீது கைவைத்துக்கொண்டு, துயரத்துடன் சொன்னான், "உன்னைத் தவிர வேறு யாரிடம் பரந்தாமா! நான் உண்மையைச் சொல்வேன். நீ ஊரிலே உலாவும் பல இளைஞர்கள் போலப், பழைய நம்பிக்கைக்காரனல்ல. ஜாதி குல பேதத்தை அடியோடு மறுப்பவன். உனக்குக் குடும்பத்திலேயும் தொல்லை கிடையாது. உன் தகப்பனார் அறிவாளி, முற்போக்கான கொள்கை உடையவர். ஆகையால், ராதாவைமணம் செய்து கொள்வதற்கு ஒரு தடையும் ஏற்படாது. உனக்குச் சம்மதமாகிவிட்டால், பிறகு எல்லாம் இனிமையாகவே முடியும். ஒன்று மட்டும் முன்னதாகவே சொல்கிறேன். ராதா என் தங்கை! அதை உலகம் ஏற்காது! என் அப்பாவின் செவிக்கு அது நாராசமாக இருக்கும்! என் தங்கை ராதா என்று தெரிந்ததும், நான் ராதாவுக்காக எதையும் செய்யும் துணிவுபெற்றேன். உண்மையை மறைப்பானேன் பரந்தாமா! ராதாவுக்காக நான் திருடனானேன். என் தகப்பனாரின்வைரக்கடுக்கனை, மார்வாடி கடையில் அடகு வைத்துப் பணம் வாங்கித்தான், ராதாவைக் கல்லூரியில் சேர்த்தேன். ராதாவுக்காக இனியும் எதுவும்செய்வேன். ஆனால் உலகிலே, அவளை ஏற்றுக்கொள்ள, உன்போன்ற உத்தமன்முன்வந்தால்தான் முடியும். பரந்தாமா! ராதா, ஒரு விபசாரியின் மகள். ஐயோ! அந்த விபசாரி, வேறு யாருமில்லை, என் தாய். சொந்த அன்னை" என்று கூறினான். அதுவரை கட்டுக்கு எப்படியோ அடங்கி இருந்த கண்ணீர், குபு குபு வெனக் கிளம்பி, என் நண்பனின் கன்னத்தில் வழியலாயிற்று. எனக்கு, ஏற்பட்ட நிலைப்பிலே என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

"உன்தாய்...................?" என்று நான், ஏதோ கேட்கஆரம்பித்தேன், வாய் மூடிக்கொண்டிருக்க முடியாத நிலையில்.

"இறந்து இருபது ஆண்டுகளாகின்றன. அப்படித்தான் அப்பா சொன்னார். சின்னம்மாவும் சொன்னது அதுதான். ஆனால் என் தாய் சாகவில்லை, தாயின் கௌரவம்செத்துவிட்டது. உயிருடன்தான் இருக்கிறார்கள், ஆனால் உலகின் முன்பு, "என் தாய்" என்று நான் அவர்களைக்கூறமுடியாது. மகனே! என்று அவர்கள் என்னை அழைக்கமுடியாது! "அண்ணா!" என்று ராதாவும், "ராதா!" என்று நானும், பகிரங்கமாகப் பேசிக்கொண்டால், பழைமையின்பிடியிலேஉள்ள இந்தப் பாழும் உலகம் தூற்றும், கேலி செய்யும். பரந்தாமா! நான் வேளாளர் குலம். ராதாவின் தாயாராகு முன்பு, ரங்கம்மாள்,வேளாளகுலப் பெரியவர் வீரராகவ முதலியாரின் மகள்! இடபோது, ரங்கம்மாள், ஒரு விபசாரி! ராமசாமி நாயுடுவின் வைப்பு. ராதா, ஒரு கதப்ப குலப் பெண்! விபசாரியின் மகள்!" என்று கூறிவிட்டுக்கதறினான் என்நண்பன்.

நாகசுந்தரம், சொன்னதுகேட்டு என் தலை சுழன்றது — ஊர்முழுவதும், அவன்தாயார் இருபதுஆண்டுகளுக்கு முன்பு இறந்துபோனதாகவும், அவளுடைய தங்கையையே, அவர் கலியாணம் செய்துகொண்டதாகவும் நம்பி இருந்தது. நானும் அப்படித்தான். நண்பன் நாகசுந்தரமும், திடீரென்றுதான், தன்தாயார் இறந்துபோகவில்லை, வழுக்கி விட்டார்கள் என்ற பயங்கரச் செய்தியைக் கேள்விப்பட்டான், என்பது தெரிந்தது. எப்படித் தெரிந்து கொண்டான்? ஊரார் அறியாத அந்த உண்மையைக் கூறியதயார்? என்று தெரிந்துகொள்ளத் துடித்தேன். நண்பனோ, புழுப்போலத் துடித்துக் கொண்டிருந்தான்.

உன்தாயார் எப்படி விபசாரியானார்கள்? ஏன் விபசாரியானார்கள்? என்றுகேட்கும் துணிவு, எப்படி ஏற்படமுடியும். எவ்வளவு வேதனைதரும் கேள்விகள் அவை? நான், நாகசுந்தரனின்பரிதாபத்துக்குரிய நிலைகண்டுமிகவும் கஷ்டப்பட்டேன். இருவரும் நெடுநேரம் பேசாமல் இருந்தோம். உலகிலே சகலமும் இருண்டுபோய், ஜீவராசிகள் யாவும்இறந்துபோய், சகலசப்தமும் அடங்கிப் போனநிலையில், நானும் அவனும்மட்டும் வீற்றிருப்பதுபோன்று எனக்குத் தோன்றிற்று. எங்குநோக்கினாலும் ஒரே சூன்யமயமாக இருந்தது. விநாடிக்கு விநாடி, என்உள்ளத்தில் யாரோகூட்டுக்கோலிடுவதுபோலிருக்கும். திரும்பிப்பார்ப்பேன்,என் நண்பனை. அவனோ விம்மிக்கொண்டிருப்பான். அணைத்துக் கொண்டேன், ஏதும்பேசாமல். என்ன சொல்லி அவனுக்கு ஆறுதலைஉண்டாக்கமுடியும்? சாந்தி தரக்கூடிய விதத்தில்என்னபேசுவது.என் தாய் விபசாரி! என்றுமகன் கூறிக்கதறும்போது, யாரால்தான், சமாதானம் கூறமுடியும். இந்த வேதனையான நிலைமை ஏன் ஏற்பட்டது, என்று எண்ணினேன். வேளாளர் குடிப்பிறந்து, தனவந்தனுக்குவாழ்க்கைப்பட்டு, தங்கரூபன்போன்ற குழந்தையைப் பெற்றெடுத்த ரங்கம், விபசாரியாகவேண்டிய அவசியம் என்ன? ரங்கம் கிழவனுக்கல்ல வாழ்க்கைப்பட்டது. குடித்து விட்டு வீதியில் புரளும் கோணல் சேட்டைக்காரனல்ல அவள் கணவன். குடிசையில் அல்ல அவள் வாழ்ந்தது. கண்டவர்மெச்சும் தனவான். பொருத்தமற்ற மணம் என்று, அந்தத் திருமணத்தைக்கூறிவிட முடியாது? ஏழ்மையால்வாட்டப்பட்டு, புருஷனால் கைவிடப்பட்டு, புலம்பித் தவிக்கும் பெண், பிறரின் போகப் பொருளானாள், என்று கேள்விப்படும்போதாவது, ஒரு சமயமில்லாவிட்டால்பற்றோர் சமயம், "ஆமாம் பாவம்! அவள் என்ன செய்வாள்" என்று ஒருவர் இருவராவது கூறமுடியும். அவள் வஞ்சிக்கொடி. அவளோ நெஞ்சில் ஈளை கட்டியகிழவன். பணத்தாசையால் அவனை மணந்தாள். வாலிபப் பருவத்தின் சேட்டையால் வேறொருவனை நாடினாள், என்ற நிலையும் அல்ல, ரங்கம்மாளுக்குஏற்பட்டது. இப்போதுங்கூட, அவர், ஆஜானுபாகுவாய்க் காணப்படுகிறார். எந்த விதத்திலும் அவர், ரங்கம்மாளுக்கு ஈடு அல்ல என்று கூறமுடியாது. என்றாலும், ரங்கம்மாள் விபசாரியானாள்! ஏன்? எப்படி? என் மனதிலே, இவ்வெண்ணங்கள் புகுந்து குடைந்தன.

சரி! எப்படியோ ஒன்று விபசாரியாகிவிட்டாள். அந்தக் கள்ளிக்காகக் கண்ணீர் விடுவதா? காரித்துப்பவேண்டும், கழுத்தை நெரிக்கவேண்டும், என்றல்லவா, தோன்றும், யாருக்கும். அதிலும், இப்படிப்பட்ட தாயால், எப்படிப்பட்ட இழிவும், பழியும், ஏற்படும் ஒரு மகனுக்கு; அவமானத்தையே அளிக்கும் அந்தத் தூர்த்தைக்காக அழுவதற்கு, எப்படி ஒருமகனுக்கு மனம் வரும்? ஆனால்,நாகசுந்தரன், தேம்பித் தேம்பி அழுகிறானே!! ஏன்? சோரம்போன மாதுக்காக ஏன், நாகசுந்திரம் இவ்வளவு உருக வேண்டும்? என்ற கேள்விகள், கிளம்பி, என்னைக்கொட்டியபடி இருந்தன.

"உன் தாயாரைப் பார்த்தாயா?"

"ஆமாம்! என்தாய்! அந்த ராமசாமி நாயுடு! ராதா! மூவரையும் பார்த்தேன்."

"எங்கே? எப்போது?"

மேற்கொண்டு நான் கேள்விகள் போடவில்லை நாகசுந்தரமே பேசலானான்.

"பரந்தாமா! எங்கள் பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடிவந்த குடும்பம், குண்டு வீச்சுக்குப் பயந்து, ரங்கோனிலிருந்து வந்தது என்பது எனக்குத் தெரிந்ததும், நான் இயற்கையாகஏற்படக்கூடிய ஆவலுடன், பர்மா சேதிபற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்து, வந்தவர்கள் யாரார்என்று விசாரித்தேன், தோட்டக்காரன் தகவல் சொன்னான்.

அழகான பெண்! அடக்கமான தாயார்!குடிகாரக் கணவன்!—இது அந்தக் குடும்பத்தினரைப் பற்றி அவன் எனக்குச்சொன்னது.பர்மா தகவலைவிட, இந்தக் குடும்பத்தின் தகவலை விசாரிக்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது.

"என்னவயது இருக்கும்;" என்று நான் தோட்டக்காரனைக் கேட்டேன், "அவன் 20 இருக்கும் இரதி தான் அழகில்" என்றான். நான்கேட்டது, அந்தக் குடிகாரக்கணவனைப் பற்றி.

"அவனுக்கு 40 க்கு மேலிருக்கும். சாயந்திரமானால் சாராயக் கடையில் தவறாமல் அவனைப்பார்க்கலாம். குடிவெறியில், வீண் சண்டைக்கு நிற்கிறான். யாரையும் மதிப்பதில்லை — அடி விழுகிற வரையில். அடித்தால் திருப்பி அடிக்கும் திறமையும் தைரியமும் கிடையாது. போலீஸ் கம்பெனியின் டு கொடுக்கிறேன், பிராது கொடுக்கிறேன், என்று மிரட்டுவான். அடிக்கடி ஆங்கிலம் பேசுகிறான் சட்டைக்காரன் போல. சாராயக் கடைக்குக், கோட்டு சூட்டுடன் வருகிறவனே அவன் ஒருவன்தான். போலீஸ் சூபரிண்டாக இருந்தவனும், ரங்கோனில். சண்டை முடிந்ததும் போய்விடுவேன், இந்தத்தரித்திரம் பிடித்த ஊரிலே எவன் இருப்பான். அங்கே தங்கம் விளைகிறது," என்று பேசுகிறான், என்று தோட்டக்காரன்சொன்னான்.

"பாவம்! அந்த அம்மா இருக்கிறார்களே, இலட்சுமி தேவிதான்! இந்தக் குரங்கு செய்கிற சேஷ்டையை எப்படித்தான் பொறுத்துக்கொள்கிறார்களோ தெரியவில்லை. அவ்வளவு அடக்கம். இவன் குடித்துவிட்டுக் கூத்தாடிக்கொண்டு வீட்டுக்குவந்தால், அந்த அம்மாள் பாவம் தலை தலை என்று அடித்துக்கொள்கிறார்கள், அவன் கண்களை உருட்டி மிரட்டி அந்த அம்மாவை நடு நடுங்க வைக்கிறான். அந்தப்பெண் ராதா — அழகி. சுதாபுத்தகமும் கையுமாக இருக்கிறது. பத்தாவது வரை படித்திருக்கிறதாம். முகத்திலே எப்போதும் புன்னகை. யாரிடமும், அன்போடுபேசுகிறாள். அந்தக்குடிகாரனும் பொறுமையையே பூஷணமாகக்கொண்ட அந்த அம்மையாரும், சண்டை போட்டால்கூட, ராதா, தன்படிப்பு உண்டு தான் உண்டு என்று இருந்துவிடுகிறாள். பாவம் இருக்கிற நகைகளை, ஒவ்வொன்றாக விற்றுச்செலவு செய்கிறான் அந்தக் குடியன். என்றைய தினம், 'இதுகளை' நடுத்தெருவில் விட்டு விட்டுப் போய்விடுகிறானோ தெரியவில்லை," என்று தோட்டக்காரன், எனக்குக்கூறினான். அவன் எங்கள் வீட்டுத் தோட்டக்காரன் மட்டுமல்ல, பக்கத்துவீட்டுவேலைக்காரிக்கு........................தெரிந்தவன், ஆகவே, அங்கே நடப்பதுபூராவும் இவனுக்குத் தெரியும்.

ரங்கோன் ராதாவின் குடும்பச்செய்தியைக் கேட்டதுமுதல், எனக்கு அவர்களைக்கண்டு பேசவேண்டும் என்ற ஆசைபிறந்தது, சமயம்வாய்க்கவில்லை.

என் அப்பாவும் சிற்றன்னையும், காசி யாத்திரை போயிருக்கிறார்களல்லவா? காசி தீர்த்தம் அனுப்பி இருந்தார் அன்று, அதையே சாக்காக வைத்துக்கொண்டு நான், அடுத்த வீட்டுக்குள் படைஎடுத்தேன்.

"பர்மா நாயுடுவுக்கும் கொஞ்சம் கொடுங்கள்" என்று வீட்டுக்காரராகச் சொன்னார், அந்த வீட்டின் பின்புறமிருந்த ஒரு அறையில்தான் அவர்கள் குடி இருந்தார்கள். சமையலுக்கு, மாட்டுக் கொட்டகைக்குப் பக்கமாக இருந்ததாழ்வாரத்தையே உபயோகித்துக்கொண்டார்கள். நான், பின்புறம் சென்று, மிக மரியாதையுடனும், கொஞ்சம் கூச்சத்துடனும், "சார்' சார்!" என்று கூப்பிட்டேன்.

"யாரது" என்று கேட்டுகொண்டே ராதா என் எதிரே வந்து நின்றாள். "அவர்........." என்றுநான் தடுமாறினேன்.

"அப்பாவும் அம்மாவும், ஆஞ்சநேயஸ்வாமி கோவிலுக்குப் போயிருக்கிறார்கள்." என்று ராதாபதில் சொன்னாள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

மணமகன் தேவை

24வயதுடையவரும் மாதம் ரூ. 150வருமானம் உள்ளவருமான வாலிபர், மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறார். பெண்எந்த ஜாதியாய் இருந்தாலும், விதவையாய் இருந்தாலும் பரவாயில்லை. விவரங்களுக்கு, கூடுமானல் போட்டோவுடன் எழுதவும்.

Mr. G.
C/o C. S. Vasan
7 A. Osborne Road,
Bangalore Cantt.

# திராவிட நாடு

காஞ்சி] 28—4—46 [ஞாயிறு

## மதுரை மாநாடு

★

மே, 11, 12 தேதிகளில் மதுரையில் கருப்புச் சட்டைப் படை மாகாண மாநாடு நடக்க இருக்கிறது. இம்மாநாடு திராவிடத்தின் விடுதலைக்காக, பெரியாரால் சமீபத்தில் துவக்கப்பட்ட தொண்டர் படையினரது முதல் மாநாடு. ஆகவே இம்மாநாட்டினுடைய முக்யத்வத்தைப்பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை. அதிலும் இம்மாநாடு தற்பொழுது கூட்டப்பட வேண்டிய அவசியமும் அவசரமும், திராவிட நாட்டின் விடுதலைப் போராட்டத்துவக்க நாளை எதிர்நோக்கி ஆவலாய்த் துடிதுடித்துக் கொண்டிருக்கும் தன்னலமற்றவீர இளைஞர்கள் அறிந்ததே.

இம் மாநாடு கூடுகின்ற வேளையிலே காங்கிரஸ்காரர்கள் பதவியிலே இருப்பார்கள். பதவிக்கு வருமளவரையிலேதான் நம்மைமறந்து, யாருக்குப் பதவி என்பதிலேயே கவலைபாய் இருப்பார்கள். ஆனால் பதவிக்கு வந்தவுடன்தான் நம்மைப் பற்றிய கவனம் அவர்கட்கு வரும். ஆகவே நம்மைப்பற்றின கவனம் அவர்கட்கு வர ஆரம்பிக்கின்ற அதே நேரத்தில்தான் இம்மாநாடு கூடுகிறது. இம்மாநாட்டில் நமக்குள்ள குறைகளையும், நம்மீது சுமத்தப்பட்டிருக்கின்ற இழிவுகளையும், அவைகளுக்கு எப்படி சட்டம் பாதுகாப்பளிக்கிறது என்பதையும்தெளிவாக அரசாங்கத்தாருக்கு எடுத்துரைக்கப்படும். இக்குறைகளையும், இழிவுகளையும் போக்க அரசாங்கத்தார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படும். அவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டால் போராட்டம் என எச்சரிக்கையும் விடுக்கப்படும்.

அப்படி அரசாங்கத்தார் நம் வேண்டுகோளை நிராகரித்தால் நம்முடைய போர்த்திட்டம், முறை, எதுவாக இருக்கும் என்பது மக்களுக்கு எடுத்துரைக்கப்படும். ஆகவே இம்மாநாட்டினுடையமுக்யத்வத்தை யுணர்ந்து, நம்முடைய பலம்என்ன என்பதைநாமும் உணர அரசாங்கத்தாருக்கும் உணர்த்த—நல்ல திட்டங்களை வகுக்க—மதுரையில் கூடும் கருப்புச்சட்டை மாநாடு தக்க காரியங்களைச்செய்யவேண்டுமாகையால், திராவிடமக்கள் அனைவரும் மதுரை மாநாட்டில் பங்கு கொள்ள வேண்டுகிறோம்.

---

## நாளும் கோளும்

6-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கை எதனை அடிப்படையாகக் கொண்டதென்பதைக் கோளறு பதிகச் சைவமெய்யன்பர் எவரேனும் எண்ணிப்பார்த்ததுண்டா? கோளறு பதிகத்தை காலாறு முறை பாராயணம் செய்யும் சைவச்சீலர்களன்றோ, பஞ்சாங்கத்தைக் கணித்துப் பார்ப்பனர் கையில் கொடுத்துக், கோள்நிலை பார்த்துக்கூறிப் பிழைக்கவழி தேடிக்கொடுக்கின்றனர்!

எனவே, சமயப்பெருநெறிகள் என்று சைவ—வைணவப் 'பெருமக்களால்' கூறப்படுபவைகள் எல்லாம், ஒரு சிலரின் பிழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டங்களேயன்றி, அவற்றால் பொதுமக்கட்கு யாதொரு பயனுமில்லை என்பது இது காறும் கூறியவற்றால் நன்கு புலனாகும். என்றாலும், இன்னும் சிறிது விளக்கி இதனை முடிப்பாம்

நம் நாட்டில் தோன்றிய சைவம் வைணவம் ஆகிய இருமதங்களும் ஆரியர்களாலேயே உண்டாக்கப் பட்டனவாகும். நடு ஆசியாவிலிருந்து இந்நாட்டுக்கு வந்த ஆரியர்களின் வரலாறுகளைக் கூறும் நூல்கள் எல்லாம், அந்நாட்டிலிருந்து இந்நாட்டுக்குப் பிழைப்பதற்காகவே அவர்கள் வந்தனர்என்று கூறுகின்றன.எனவே,பிழைக்கவந்தஆரியர்கள்,தங்கள் பிழைப்புக்கு வகை தேடிக்கொண்ட துறைகள் பலவற்றுள் மதமும் ஒன்றாகும். மதத்தைப் பற்றிய நூல்கள் எல்லாம், ஆரியர்களாலேயே அவர்களின் மொழியான சமஸ்கிருதத்திலேயே முதலில் எழுதப்பட்டன. பின்னர் தான், அவை, இந்நாட்டுப் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, ஆரியரின் பிரச்சார பலத்தாலும் சூழ்ச்சியாலும், ஆரியரல்லாத திராவிடர்களும் அவற்றைப் பின்பற்றவேண்டியவர்களானார்கள். வடமொழியில் ஆரியரால் எழுதப்பெற்ற மதநூல்களை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் வைத்தே, பின்னர், திராவிடர்களால் பல நூல்கள் தமிழிலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் எழுதப்பட்டன. அப்படித், திராவிட மொழிகளில் மதநூல்கள் உண்டாக்கப் பட்டபோதிலும், மதக்கொள்கைகளை விளக்குமிடங்களில் எல்லாம் பெரும்பாலும் வடமொழிச் சொற்களையே பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஏனென்றால், தமிழ்—தெலுங்கு — மலையாளம் ஆகிய திராவிட மொழிகளில் மதக்கொள்கைகளை விளக்கும் சொற்கள் இருந்ததில்லை. மதம் என ஏதாவதொன்று திராவிடர்கள்பால் இருந்திருந்தால்தானே, அதனை விளக்குவதற்கும் அம்மொழிகளில் சொற்கள் இருந்திருக்க முடியும்!

ஆரியமதம் நம்நாட்டில்பரவத்தொடங்கியபின்னர், தமிழ் தவிர மற்றைத் திராவிடமொழிகள் எல்லாம் சமஸ்கிருதத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு அம்மொழிச் சொற்கள் பலவற்றைத்தம்முடைய மொழிகளுடன் சேர்த்து உறவு கொண்டுவிட்டன இந்த நிலையிலும், தமிழ் தன் தனித்தியங்கும் வாய்ப்பை இன்றுவரை விட்டுக் கொடுக்கவேஇல்லை. என்றாலும், மதத்தோடு தொடர்புகொள்ளும்போதுமட்டும் தமிழால் தனித்து நிற்கமுடிவதில்லை. தமிழிலுள்ள எந்த ஒரு மதநூலை எடுத்துக்கொண்டாலும் வடமொழிச் சொல் கலவாத தமிழ்நூலைப்பார்க்கவேமுடியாது. வடமொழிச் சொற்களின் துணையில்லாமல்மதக்கொள்கைகள் எதனையும் விளக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது. இதனால், வடமொழியில்லையேல் சைவ வைணவ மதங்கள் இல்லை என்ற மறுக்கமுடியாத உண்மையும், இவ்விரு மதங்களும் ஆரியர்களாலேயே தங்கள் பிழைப்பிற்காகவே உண்டாக்கப்பட்டன வென்ற அசைக்கமுடியாத ஆணித்திறமான உண்மையும் பெறப்படுதல் காண்க.

எனவே, வடமொழியின் உதவியின்றி எவ்விதத்திலும் இயங்க முடியாதசைவம் வைணவம் முதலான ஆரிய மதங்களும், வடமொழியின் துணையின்றி அம்மதங்களை விளக்கமுடியாத மதநூல்களும் திராவிடநாட்டில் இருக்கும்வரைநாளும் கோளும் நம்மைவிட்டு ஒருபோதும் நகராது என்பதுமட்டுமல்ல; அவை நம் நாட்டில் இருக்கும் வரையில், நம்மவர்க்குத்தன்மதிப்போடு வாழும் இயல்பும் ஏற்படாதென்பதைத் திண்ணமாகக்கூறலாம். நாளும் கோளும் பிறவும் நம்மை நாளும் நலியச் செய்துகொண்டே இருக்கும்

இனிப், பிழைக்க வழியின்றி இந்நாட்டில் வந்து குடியேறிய ஆரியர்கள், திராவிட மக்களின் நாகரிக வாழ்க்கையின் மேம்பாட்டினையும், வறுமையும் கவலையுமற்ற வாழ்க்கை முறைக்கேற்பஅவர்கள் வகுத்துக்கொண்டிருக்கும் பலவகைத் தொழின் முறைகளையும் கண்டு, தாமும் அவர்களைப்போலச் செல்வ வாழ்க்கையில் திளைத்திருக்க எண்ணினர்கள். ஆனால், அவர்கள் எந்தக் காலத்திலும் தாமாகவே பாடுபட்டுத் தம்வாழ்க்கைக்கு வகை தேடிக்கொள்ளும் தொழின் முறைகளை மேற்கொள்ளாது ஊர் சுற்றித்திரியும் வழக்கத்தையேமேற்கொண்டு கூத்தாடிப் பிழைத்தவர்களாகையால், அவர்களால் தன்மதிப்பு வாய்ந்த வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ளமுடியாது போயிற்று. எனவேதான், அவர்கள் தங்கள் பிழைப்புக்குஏற்ற ஒருநுட்பமான வழியைக் கண்டுபிடித்தார்கள். அவ்வழிதான், இன்றைக்கு நம்நாட்டில் 'மதம்' என்ற பெயரால் வைத்து வழங்கப்படும் பகுத்தறிவுக் கொவ்வாக்கோள் நாள் முதலிய கொள்கைகளைக்கொண்ட பழக்கமாகும்.

அந்தக் காலத்திலிருந்த தமிழ் வேந்தரும், தமிழ்ச்செல்வரும், தமிழ்ப்புலவரும் கள்ளங் கவடற்ற தூய உள்ளத்தினராய் இருந்தமையின், ஆரியருடைய கவடவுரைகளைப் பொய்யெனத் தள்ளாது மெய்யெனக் கொள்ளவேண்டி ஏற்பட்டது. இனி, ஆரியர்கள் தங்கள் பிழைப்பிற்கு வழிகோலிய திட்டங்களைஎல்லாம் நிலைபெறச் செய்வதற்காக இன்னொரு சூழ்ச்சியும் செய்தனர். அதாவது, "உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்பத்தில் விருப்பமும் துன்பத்தில்வெறுப்புமே காணப்படுகின்றன. ஆனால் இவ்வுலக இன்பங்கள் எல்லாம் நிலையில்லாத சிற்றின்பங்களாகவே உள்ளன. அதனாலேயே, அறிவுடையவர்கள் நிலைபேறுடைய பேரின்பத்தை அடைய முயலுகிறார்கள்; அத்தகைய பேரின்பத்தை அடைய அவர்கள் கொண்டொழுகும் வழியே 'மதம்' என்று சொல்லப்படும்" என்று கூறியதோடு, அதற்கேற்பப் பல கட்டுக்கதைகளையும் எழுதி மத நூல்கள் பலவற்றை உண்டாக்கி அவைதம்மை எல்லாம் நம்மக்கள் நம்பும்படியும் செய்த சூழ்ச்சிதான் இன்று நம்மவரை இவ்விரங்கத்தக்க நிலைக்குக் கொண்டுவந்துவிட்டதென்பதை இனியேனும் நம்மவர் உணர முடியாதென்றால், "நாளும் கோளும் நம்மை என்னசெய்யும்" என்று ஒரு சாராரும், "நாளும் கோளும்நம்மை நலியச்செய்தே தீரும்; ஆகையால், நாள் கோள் பார்த்தே எந்தக் காரியத்தையும் செய்தல் வேண்டும்" என்று இன்னொரு சாராரும் கூறிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

எனவே, இந்த இரண்டும் கெட்டநிலை மாறி, ஒரு திட்டமான முறை, வாழ்க்கையின் பயனைப் பாழ்படுத்தாத விதத்திலும், ஒருவர் உழைப்பால் இன்னொருவர் வாழாத விதத்திலும்அமையவேண்டுமென்பதற்காகவே, அதற்குத் தடையாக உள்ளவைகளை எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. இது குற்றமா?

●

## ரங்கோன் ராதா

3-ம் பக்கத் தொடர்ச்சி

"நான் அடுத்தவீடு. என்அப்பா, காசியாத்திரை போயிருக்கிறார். காசிதீர்த்தம் கொண்டுவந்திருக்கிறேன். தாலாம்என்று வந்தேன்" என்று நான் கூறிக்கொண்டே ஒரு சிறுசெம்பைக் கொடுத்தேன்; ராதா அதை மரியாதையாக வாங்கிக்கொண்டாள். ஒரு விநாடி மௌனமாக நின்றேன். ராதா, "அடுத்தவீடா தாங்கள்?" என்று கேட்டாள். "ஆமாம்! நாகசுந்தரம் என்று பெயர்." என்று கூறிவிட்டு, விடைபெற்றுக் கொண்டேன். பிறகு, அவர்களைச் சந்திக்கச் சமயமில்லை. உன்னிடம் ராதாவைப்பற்றி, ஒருநாள்மாலை சொன்னேனல்லவா, அன்று கூடஎனக்குத் தெரியாது, நான் பேசியது என் தங்கையிடம் என்ற விஷயம். உன்னிடம் ராதையைப்பற்றிப் பேசிவிட்டு வீடு திரும்பினேன், இரவுமணி பத்துஇருக்கும் வீட்டுக்குள் நுழையும்போது.

"ஐயோ! அடபாவி! பாதகா!" என்று அழுகுரல் கேட்டது.

"அப்பா! அப்பா! ஐயோ!" என்று ராதாவின் குரலும் கேட்டது.

"கொன்றுவிடுவேன். கொன்றுபோடுவேன்! ராஸ்கல்" என்ற மிரட்டும்குரல் கேட்டது.

தோட்டக்காரனை நோக்கினேன்.

"அதான், குடித்துவிட்டுக் கலாட்டா செய்கிறான், பர்மா நாயுடு" என்றான். இதற்குள் அழுகுரல் பலமாகி விட்டது. வேகமாக ஓடினேன் அடுத்த வீட்டிற்குள். தன்கைத்தடியால், அந்தக்குடிகாரன் அந்த அம்மையை அடித்துக் கொண்டிருந்தான். ஒழுகும் இரத்தத்தையும் துடைக்க நேரமின்றி, அந்த அம்மையார் அலறிக்கொண்டிருந்தார்கள்.ராதைஇடையேநின்றுதவித்தாள்.

"ஐயா! ஐயா! இது என்ன அக்ரமம்! ஒரு ஸ்திரீயை இப்படி இம்சை செய்கிறீரே, தகுமா?" என்று கேட்டுக் கொண்டே, பர்மாநாயுடுகையில் இருந்த தடியைப் பிடுங்கிக்கொண்டேன். அவன் முதலில்கொஞ்சம்திடுக்கிட்டுப்போனான், ஆனால் உடனே தைரியமடைந்து, என்னைப்பார்த்து,

"இவள் என்சம்சாரம். நீயார், இங்கே நுழைய? உன்வேலையைப்பார் இடியட்!" என்றான்.

"உன்சம்சாரம் என்றால் அதற்காகச் சித்திரவதை செய்வதா?"

"நீஎன்ன இந்த ஊருக்கு ராஜாவா,? நியாயம் கேட்க வந்துவிட்டாயே? போடா, மடையா! பெண்டாட்டி என்றால், பயப்பட்டுச்சாகும் பேடியல்லடா நான். கொடுதடியை, போவேளியே"

"'ஐயா! நியாயம் கேட்பதற்குயாருக்கும் உரிமை உண்டு"

"உரிமை யாவது எருமையாவது. போடா வெளியே"

என்னை அடிக்கக் கையை ஓங்கினான் பர்மா நாயுடு. ராதா, "அப்பா! அவர் நம்மபக்கத்துவீடு. ஒன்றும் செய்யாதீர்" என்று கூவினாள். அவனோ, என்கழுத்தைத் தாவிப் பிடித்தான். குடிவெறியில் ஏதேனும் செய்துவிட்டால் என்னசெய்வது என்று திகில் உண்டாயிற்று, உண்டாகவே, எட்டி ஒரு உதை கொடுத்தேன். அவன் கீழே விழுந்தான்.

(தொடரும்)

★

## திறந்த மடல்

டாக்டர். சி. ராஜகோபாலாச்சாரியார்,

(வழி நிலை) புதுடெல்லி.

**மாஜி பிரதமரே!**

தாங்கள் சென்னை மாகாணப் பிரதமராக வேண்டுமென்று சகலவித சம்பிரதாயங்களையும் கையாண்டு பார்த்தீர்கள். கடைசியில் படுதோல்வி யடைந்தீர்கள். உண்மையைக் கூறவேண்டுமானால், தங்களுக்குப் பிரதமர்பதவிகிடைக்கவேண்டுமென்பதற்ககாவே காந்தியார் (அவர்தம் அந்தராத்மா உள்பட) அவரின் தன்மையையும் விட்டு மிகக் கீழ்த்தரமானமுறையில்கூட அறிக்கைகள் வெளியிட்டும் பார்த்தார். உங்களுக்கு வக்காலத்து வாங்க வந்த காரணத்தினால் காந்தியார் மகிமைக்கும் பங்கம் ஏற்பட்டுவிட்டது. இதுவரை காந்தியார் கட்டளையை காங்கிரஸ்காரர் எவருமே தட்டியது கிடையாது. ஆனால் இம்முறையோ சென்னையில் பத்துநாள் பஜனைசெய்த மகாத்மியமிருந்துங்கூடக் காந்தியாரின் யோசனையைச் சட்டைசெய்வாரே இல்லாது போய்விட்டனர். அரசமரத்தைப் பிடித்தது ஆலமரத்தையும் பிடித்ததுபோன்று தங்களுக்கு ஏற்பட்ட தோல்வி, காந்தியத்தையே சாய்க்கும் நிலையாக மாறிவிட்டது. அதுமட்டுமல்ல, வடநாட்டுக்காரர்களுடைய ஆதிக்கம் இனி இந்நாட்டில் (திராவிட நாட்டில்) செல்லுபடியாகாது என்றும் நிரூபித்தாய்விட்டது. தங்களின் அரசியல் வாழ்விலேயே இவ்விதப் பெருந்தோல்வியைக் கண்டிருக்கவே மாட்டீர்களாதலால், என்னுடைய அனுதாபத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும் இனித் தாங்கள் ஒன்றைமட்டும் உறுதியாக மனதில் வைக்கவேண்டுகிறேன். காங்கிரசுக்குள்ளே திராவிட இன உணர்ச்சி புகுந்துவிட்டது. அவ்வுணர்ச்சியின் எதிரொலியேதான் இன்று காந்தியாருக்கும்—வடநாட்டுக்காரர்களுக்கும்ஏற்பட்டுள்ள முதல் தோல்வியாகும். வடநாட்டு ஆதிக்கத்துக்குத் துணையாக பார்ப்பனீயமும்—பரங்கியமும் இனி என்னதான் மறைமுக ஆதரவுகொடுக்க முன்வரினும், அவைகள் நிலைத்திருக்க முடியாது. பாபம், இனித் தாங்கள் மகாபாரதப் பிரசங்கம் செய்வீர்களாக்கும் அன்றொருநாள் தங்களின்திருவாயாலேயே கூறியதுபோன்று. அவ்விதமானால் தங்களின் பகவத் பாகவத கோஷ்டிக்கு ஆட்கள் பஞ்சமில்லை. தங்கள் கட்டளைப்படி நடு நிலைமை வகித்த 38 ஆத்மாக்கள்தான் தயாராய் இருக்கின்றனவே, பார்க்கலாம் போகப் போக என்னென்ன திருவிளையாடல்கள் நடக்கின்றனவென்று.

கூத்தரசன்

●

## பிறப்பு

சென்னை பி. ஏ. கா. பழனிச் சாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவிக்கு 1—4—46-ல் ஒரு ஆண்மகவு பிறந்து "ரூசோ" எனப் பெயரிட்டதன் நினைவாகத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 1—0—0 தரப்பட்டது.

# நாளும் கோளும் - நாமும்

[ஈழத்தடிகள்]

மதுரையிலுள்ள சமணர்களை வென்று சைவத்தை நிலைநாட்டுவதற்காக மறைக்காட்டினின்றும் புறப்பட்ட சம்பந்தரை, அப்பர் தடுத்து, "இப்போது கோள்நிலை நன்றாயில்லை; நீர் அங்கு போதல் தகாது" என்று கூறினர். அதற்குச் சம்பந்தர், "நாம்போற்றுவது சிவபிரான் திருவடி; நாள்கோள் நம்மை என்செய்யும்" என்று சொல்லி, அதற்கு மேற்கோளாக "வேயுறு தோளிபங்கன்" என்ற தேவாரத்தையும் பாடிக் காண்பித்து மதுரைக்குப் போனாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே, "கோள்நிலை" நல்லாயில்லை என்று அப்பர் சொல்கிறார். நாளும் கோளும் நம்மை என்ன செய்யும் என்று சம்பந்தர் கூறுகின்றார். இதில் யார் கூறுவதை உண்மையெனக் கொள்வது? இன்றும் கோள்நிலை பார்க்கும் வழக்கம் சைவ—வைணவ அன்பர்களால் கையாளப்பட்டு வருகின்றது. எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் கோள்நிலை பார்த்தே செய்கின்றனர். செத்தபிணத்தைச் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்வதற்குக்கூடக் கோள்நிலை பார்க்கும் வழக்கம் இன்றைய சைவ வைணவர்கள்பால் இருக்கக்காண்கின்றோம். அதுமட்டுமல்ல; கோள்நிலை பார்த்தே எந்தக் காரியமும் செய்யப்படவேண்டுமென்பதை வலியுறுத்த அதற்கென ஒரு தனி நூலும் "பஞ்சாங்கம்" என்ற பெயரால் ஆண்டுதோறும் புதிது புதிதாக வெளியிடப்பட்டும் வருகின்றது. இராகுகாலம்; யமகண்டம்; குளிகை; காலநேமி; அர்த்தப்பிரகர்ணன்; வாரசூலம்; திதி; நட்சத்திரம்; யோகம்; கரணம்; நாள்; திங்கள் ஆகியவைகளைக் குறிப்பிட்டு, எதில் எதைச் செய்யலாம்; எதில் எதைச் செய்யப்படாது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இச்சொல்லப்பட்ட வரையறைக்குக் கட்டுப்பட்டே நம்நாட்டுச் சைவ—வைணவர்கள் எல்லாரும் தங்கள் காரியங்களைச் செய்துவருகின்றனர். ஆகையால், அப்பர் கூறுகின்றபடி, கோள்நிலை சரியாக இருக்கிறதா என்று பார்த்தே எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும் என்பதை உண்மையெனக் கொள்ளலாம் என்றாலோ, சம்பந்தர் அதற்கு இடம் தருவதாகக் காணோம். நம்பனடியவர்களை நாளும் கோளும் நாடாதென்கின்றார். இங்ஙனம் கூறியதோடு அவர் நிற்கவில்லை.

"...............................................
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழம் வெள்ளி சனிபாம்பிரண்டு
முடனே, ஆசறு நல்ல நல்ல அவை
நல்ல நல்ல அடியாரவர்க்கு
மிகவே."

என்ற தேவாரத்தால் நன்கு வலியுறுத்தியுமுள்ளார். அதாவது சிவனை வழிபடுகின்றவர்களுக்கு எந்நாளும் நன்னாளே என்பது சம்பந்தரின் துணிந்தமுடிபாகக் கூறப்படுகின்றது. ஆனால், தமிழ்மறை என்று சைவ மெய்யன்பர்களால் போற்றப்படும் தேவாரத்தின்வாயிலாக ஆதாரம் காட்டிச் சொல்லப்படும் சம்பந்தரின் முடிபையே சைவர்கள் கடைப்பிடித்து ஒழுகுகின்றார்களோ என்றால், இல்லையே. அப்பர் சொல்லுகின்றபடி கோள்நிலை முதலியன பார்த்தன்றோ சைவர்கள் தங்கள் காரியங்களை இன்றும் செய்கின்றனர். ஏன் இந்தநிலை ஏற்பட்டது? அப்பர்கூறுவதுதான் உண்மை யென்றால், சம்பந்தர் கூறுவது பொய் என்று கொள்ளும் நிலை ஏன் இன்னும் ஏற்படவில்லை! நாளும் கோளும்நம்மை அணுகாது என்று சம்பந்தர் கூறி 1400 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் அது நடைமுறையில் இருக்கிறதென்றால், சம்பந்தர்கூறியதைச் சைவர்கள்ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதானே பொருள். "அற்றன்று; நீர் கூறுவதுபொருந்தாது; சம்பந்தர் கூறியது உமக்கும் எமக்குமன்று; அது அவருக்கே கூறியதாகும்; சம்பந்தர் அம்மையப்பரால் அளிக்கப் பட்ட ஞானப்பாலை உண்டு அருள்பெற்றவர்; அப்படிப்பட்டவரை நாளும் கோளும் நலிவுறுத்தாது என்பதே அதன் பொருள்" என்பதாகக் கூறிச் சிலர் எம் மீதுசீற்றங்கொள்ளக்கூடும். ஆனால், சம்பந்தர், தாம் பாடிய தேவாரத்தில், தம்மை மட்டும் குறிப்பிடாமல், சிவனடியார்கள் எல்லாரையுமே குறிப்பிட்டுப் பாடியுள்ளார். சம்பந்தரால்பாடப்பெற்ற தேவாரத்தில் வரும் "அடியாரவர்க்கு மிகவே" என்றசொற்றொடர், ஒருவரைமட்டும் குறிப்பிடாது பலரைக் குறிப்பிட்டுப் பொருள் தந்து நிற்றல் காண்க. அன்றியும், சம்பந்தர் இதனைப் பன்மையாகக் கூறியதனாலேயே அப்பரும் அவருடன் மதுரைக்குப்போக முயன்றார் என்றுசொல்லப்பட்டுமிருக்கிறது. ஆனால், சம்பந்தர் அப்பரைத் தம்முடன் அழைத்துச் செல்ல இணங்கவில்லை. சம்பந்தர் அப்பரை நோக்கி "நீர் இங்கேயே இரும்" என்று சொன்னாரேயன்றிக், "கோள்நிலை என்னை ஒன்றும் செய்யமுடியாது; உம்மை அது வருத்தும்" என்று சொல்லவில்லை. கோள்நிலை, தம்மைமட்டும் பற்றி வருத்தாது; ஏனையோரை அது வருத்தும் என்பது சம்பந்தரின் கருத்தாய் இருந்தால், அதை அவர் வெளிப்படையாகக் கூறியிருப்பார். எனவே, கோள் நிலை எதுவும் சிவனடியார் எவரையும் சாராதென்பதே அப்பாடலின் பொருளாகும். ஆனால், கோள் நிலை பார்ப்பது சிவநெறிக்கு மாறுபட்டதென்ற சம்பந்தர் கருத்தை இன்றைய சைவ மெய்யன்பர்கள் ஆதரியாததன் காரணம் என்ன?

சம்பந்தரைத் தங்களுடைய சமயாசிரியர் என்று ஒப்புக்கொள்ளுகின்ற சைவர்களும், அவர் பாடிய தேவாரத்தைத் தங்களுடைய "மறை" எனப்போற்றுகின்றவர்களும், சம்பந்தரால் விலக்கப்பட்ட கோள்நிலை பார்க்கும் வழக்கத்தை மேற்கொள்ளுகின்றனர் என்றால், அவர்கள், உண்மையாகவே, சைவ சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றின்படிஒழுகுகின்றனர் என்று எப்படிக்கூறமுடியும்! சிவனுடையதிருவடியைப்போற்றுகின்றவர்களைக் கோள்நிலை தாக்காதென்று சம்பந்தர் தாக்கீது விட்ட பின்னரும், தங்களைச் சைவர்கள் என்று சாற்றிக்கொள்ளும் "சன்மார்க்க சீலர்கள்" கோயிலுக்குப் போவதற்குக் கூடக் கோள் நிலை பார்த்தே போகின்றனர் என்றால், அத்தகையினர் பின்பற்றும் சைவ நெறியின் செவ்விய சிறப்புத்தான் என்னே! என்னே!! காலையில்எழுந்ததும் குளித்துப்பட்டணிந்து, கட்டுக்கட்டாக நெற்றியில் நீறிட்டுத், தொண்டர் புராணத்தைத் தொட்டுக்கும்பிட்டுத், தேவாரப் புத்தகத்தைச் சிரமேற்றாங்கி, நெற்றிக்கண்ணனை நெடுக நினைந்து, நீற்றுப்பதிகத்தையும் கோளறு பதிகத்தையும் பிழையறப் பாராயணம் செய்யும் ஒரு 'உண்மைச்'சைவமெய்யன்பர் கூடத், தாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்கும் கோள்நிலைபார்க்கின்றார் என்றால், சைவத்தின் உயர்வை 'உலகுக்கு' உணர்த்திய வராகக் கூறப்படும் சம்பந்தரால் பாடப்பெற்ற கோளறு பதிகத்திற்கு எத்தனை அளவு மதிப்புக் கொடுத்து அதனைப் போற்றுகின்றார் என்பதனை எண்ணும்போது, அவருடைய்சைவப்பற்றின்பெற்றி தெற்றெனப் புலப்படுகின்ற புதுமையைப் பாருங்கள் அன்பர்களே!

சம்பந்தரால் பாடப் பெற்ற தேவாரப் பதிகங்கள் பல. அவற்றுள் சிலவற்றிற்கே, "இந்தப்பதிகம் இன்ன காரணத்திற்காகப் பாடப்பட்டது; இதை ஓதினால் இன்ன பலன் உண்டு" என்று எவரும் எளிதில் அறிந்து அதன்படி ஒழுகவேண்டுமென்பதற்காகவே அவற்றிற்கு, அப்பதிகங்களின் பொருளையும் பயனையும் விளக்கும் முறையில் தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் வருவன சிலவற்றுள் 'கோளறு பதிகமும்' ஒன்று. 'கோள்—அறு' என்பது கோளறு என்றாயிற்று. 'கோள்,' நீங்க — அணுகாதிருக்க இல்லாதொழிய—அறுபட என்பன அதன் பொருள்.

எனவே, 'நாளென் செய்யும்? வினைதான் என் செய்யும்? நம்மை நாடிவந்த கோள் என் செய்யும்?' என்ற நம்பிக்கையோடு, அதற்கெனப்பாடப்பெற்ற கோளறுபதிகத்தை ஓதினால், கோள்கள் எதுவும் தம்மை அணுகா என்ற உறுதியை உள்ளத்தேகொண்டு, உண்மையாகவே அதனை ஓதிய பின்னரும், கோள்நிலை பார்த்தே தம்காரியங்கள் அனைத்தையும் சைவமெய்யன்பர்கள் எல்லாரும் செய்கின்றனரே! இந்த நிலை ஏன் ஏற்பட்டது? சைவத்திற்கும் நம்பிக்கைக்கும் தொடர்பே இல்லையா? சம்பந்தரால் பாடப்பெற்ற 'மந்திரமாவது நீறு' என்றதிருநீற்றுப்பதிகத்தால், சமண சமயத்தைத் தழுவியிருந்த கூன்பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்ப (ஜுர) நோய் நீங்கியதோடல்லாமல், அந்த அற்புதத்தைக் கண்ட பாண்டியன் சமணத்தை வெறுத்துச் சைவத்தைத் தழுவினான் என்பதையும் நம்பி, அதனைச் சான்று காட்டிச் சைவத்தின் உயர்வை உலகுக்கு உரைக்க முன்வரும் சைவமெய்யன்பர்கள், அதே சம்பந்தரால் பாடப் பெற்ற கோளறு பதிகத்தை நம்பாமல் இருப்பதன் காரணம் என்ன?

கோளறு பதிகத்தை ஓதுவதனால் ஒருவனுக்கு ஏற்படும் கோள்நிலை நீங்காதென்று எண்ணிக், கோள் நிலை பார்த்தேகாரியங்களைச்செய்ய வேண்டுமென்பது சைவர்களின் முடிபானால், திருநீற்றுப் பதிகத்தால் வெப்பநோய் நீங்கிற்றென்பதும், வேறு, தேவாரப்பதிகங்களால், கதவு திறபட்டதும், அடைபட்டதும், படிக்காசு பெற்றதும், இறந்தவனை எழுப்பியதும், எலும்பைப் பெண்ணாக்கியதும், ஆண் பனையைப் பெண்பனையாக்கியதும், கூனை நிமிர்த்தியதும், நெருப்பிலிட்ட ஏடு வெந்துபோகாமல் இருந்ததும், ஆற்றிலிட்ட ஏடுஎதிர்சென்றதும், நஞ்சு அமுதானதும், கடலிற்போட்ட கருங்கல்தோணியாக மிதந்ததும், முதலையுண்ட பிள்ளை பிழைத்ததும், ஆகிய இன்னபிற அற்புதங்கள் எல்லாம் வெறும் பொய்; உண்மையேயல்ல வென்பதையும் சைவர்கள் ஒப்புக்கொண்டாகவேண்டுமல்லவா! ஒரே சமயாசிரியரால், அந்தச் சமயத்தின் உயர்வுக்கும் உண்மைக்குமாகச் சொல்லப்பட்ட கொள்கைகளில் சிலவற்றை நம்பி ஏற்றுக்கொள்வதும் சிலவற்றைக் கைநழுவவிடுவதும் தானா அச்சமயத்தைக்கடைப்பிடித்து ஒழுகுபவர்களின் விழுமியநெறி?

சைவ சமயத்தையும் அதன் கொள்கைகளையும் உண்மையென ஒப்புக்கொண்டு அவ்வழி நிற்பவர்களான சைவர்கள், தங்கள் சமயக் கோள்கைக்கு முற்றிலும் புறம்பான பஞ்சாங்கத்தைக் கண்ணால்கூடப் பார்க்கக்கூடாதே! ஆனால்,பஞ்சாங்கம் பார்க்காது தன்காரியங்களைச் செய்யும் ஒருசைவனையாவது காட்ட முடியுமா? பஞ்சாங்கம் வைத்திருக்காதசைவன், உண்மையானசைவனாகமாட்டான்என்று கூறக்கூடிய முறையிலன்றோஒவ்வொருசைவன் வீட்டிலும் அது இருக்கக்காண்கிறோம். பஞ்சாங்கத்திற்குத்தேவையும் உரிமையுள்ள பார்ப்பனர் வீடுகளில்கூட ஒருக்கால் பஞ்சாங்கம் இல்லாமல்இருக்கும். ஆனால் சைவ மெய்யன்பராம் தமிழ்ப்பெருமகனார்வீட்டில் கட்டாயம் பஞ்சாங்கம் இருந்தேதீரும். எப்படிப்பட்ட சைவமெய்யன்பர்? கோளறு பதிகத்தை நாள் தவறாது ஓதும் சைவ மெய்யன்பர்! அவர் அந்தப் பஞ்சாங்கத்தை எந்த இடத்தில் வைத்திருப்பார் என்று எண்ணுகிறீர்கள்! எந்தத்தேவாரப் புத்தகத்தைத் தமது பூசைக்குரிய பாராயண நூல் என்று கருதுகிறாரோ, எந்தத் தேவாரப் புத்தகம் பஞ்சாங்கத்தைக் கண்டிக்கிறதோ, அதே சுவடிக்குப்பக்கத்தில்தான்,மஞ்சளால் ஒப்பனை செய்யப்பட்ட பஞ்சாங்கமும் பக்குவமாகவும் பாதுகாப்பாகவும் வைக்கப்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல; ஒரு சைவமெய்யன்பரின் போற்றுதலுக்குரிய பூசைப்பொருள்களில் பஞ்சாங்கமும் ஒன்றாக இருக்கும். அவருடைய பூசைகளை ஏற்ற பிறகடவுட்பொருள்கள் தங்களாலான வழுங்களைக்கொடுப்பதுபோலவே பஞ்சாங்கமும் தன்னாலான வரத்தை அளிக்கும் என்பது அந்தச் சைவத்தமிழ்ப் பெருமகனாரின் நினைப்பாகவும் இருக்கும்.

பூசையறையில், "வேயுறுதோளி பங்கன்" என்ற தேவாரத்தைப் பாடி "நாளும் கோளும் நம்மை நாடாது" என்ற நினைப்புடன் வெளியே வந்த சைவச்சீலர், பலகாரம் அருந்தியதும் உடனேபஞ்சாங்கத்தை எடுத்துப் புரட்டுவார். எதற்கு? "இன்று ஒருவேலையாக வெளியூருக்குப்போக வேண்டும்; நாள் நட்சத்திரம் நன்றாய்இருக்கா? கோள்நிலை சரியாக உள்ளதா? என்

(அடுத்த பக்கம் பார்க்க)


## தாது புஷ்டிக்கு

**மஹா வீரிய லேகியம், அயக்காந்தங்க செந்தூரம்**

**30 வேளை: ரூபா 10—0—0**

இணையற்ற மருந்துகள் என்றநர்சாட்சிகள்குவிகின்றன. வெளியில் சொல்ல நாணப்பட்டு ஒழித்துவைத்திருக்கும் கிழத்தன்மையை நீக்கி நரம்புகளை முறுக்கேற்றிவிடும். சரீரம் யௌவன தேசசுடன் பிரகாசிக்கும்.

**சரஸ்வதி வைத்திய சாலை,**

**பழனி (S. I.)**

## நாளும் கோளும்

5-ம் பக்கத் தொடர்ச்சி

தப்பக்கத்தில் சூலம்! எப்போது இராகுகாலம்? போகிற காரியம் வெற்றிபெறுமா? பெறுதா?" என்ற இன்னபிறவற்றைப்பார்ப்பதற்காக. சென்ற காரியத்தில்வெற்றிபெற்றுவிட்டால், "பஞ்சாங்கத்தைப் பொய்யென்று சில பஞ்சைகள் கூறுகின்றதுகளே! அதுகளுக்கு என்ன தெரியும்? எதை எடுத்தாலும் 'அதை நம்பாதே! அதுபொய்' என்று புலம்புவதே இதுகளின் தொழிலாய் விட்டது; பஞ்சாங்கத்தில்கூறியிருப்பதன்படி நல்லவேளையாகப் பார்த்துப் போனதினாலன்றோ, என்னுடைய காரியம் வெற்றியாக முடிந்தது" என்று இறும்பூதெய்தி மகிழ்வார். இனிப், போன காரியத்தில் வெற்றி பெறுவிட்டாலோ, பாழாய்ப்போனபஞ்சாங்கத்தைப் பார்த்துப் போனதினால்தான் இந்தக்கதியாச்சு; எந்த முட்டாள் கணித்தானோஇந்தப்பஞ்சாங்கத்தை! நான் அப்பவே கூறினேன், இந்தப் பஞ்சாங்கம் வேண்டாம்; சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப்பட்ட பஞ்சாங்கத்தையேவாங்கவேண்டுமென்று; ஏதோ அதைவிட இது கொஞ்சம் மலிவாய் இருக்கிறதே என்றுவாங்கித்தொலைத்தோம்; அந்தப்பலனை இதோ அனுபவிக்கிறேன் என்று. இலாபநட்டக் கணக்குப் பார்க்கும் முறையில் அவருடைய அறிவு செல்லுமேயன்றி, அன்று காலையில், பூசையறையில் இருந்துகொண்டுஒருமுறைக்குப்பலமுறை திருப்பித் திருப்பிப் பாராயணம் செய்த கோளறுபதிகமோ, அதன் பொருளோ அவர் நினைவில்கூட வராது.

இந்த நிலையில், பக்கத்துவீட்டுக்காரர் அந்தச்சைவர் வீட்டுக்குப் போய், "என்ன சார்! நம்மகுழந்தைக்குப் பதினைந்து நாட்களாக ஒரே காய்ச்சலாக (ஜுரமா)க இருக்கிறது; எத்தனையோ மருந்துகள் கொடுத்தும் வெப்பநோய் தணிந்தபாடில்லை! என்ன செய்வதென்று தெரியவில்லை" என்பார். உடனே அந்தச் சைவப் பெரியார் தம்முடைய சைவப் பிரசாரத்தை ஆரம்பித்து விடுவார்; "இதெல்லாம் மருந்தால் தீருகிற நோயா? மருந்தெல்லாம் சும்மா ஒப்புக்குக் கொடுப்பது தானே! இதோபாரும் அந்தக்காலத்திலே நம்ம பெரியவா என்னசெய்தா தெரியுமோ? கூன் பாண்டியன் என்ற ஒரு மன்னனுக்கு நெருப்பென வீசும் வெப்பநோய் உண்டாயிற்று; மருந்தினால் தான் அந்நோய் தீர்ந்ததென்று நீர் நினைப்பீர்; அதுதான் இல்லை; 'நம்ம' சம்பந்தர்—சமணத்தை அழித்துச் சைவத்தை நிலைநாட்டிய சீர்காழிச் செம்மல்—பாலறுவாயர் என்ன செய்தார் தெரியுமோ; ஆலவாயப்பனை நினைத்த வண்ணம் ஒருதேவாரப்பதிகத்தைப் பாடித் திருநீற்றை அம்மன்னன் உடம்பில் தூவினார்; அவ்வளவுதான்; வெப்பநோய் அப்பவே தப்பிப் பிழைத்தேனென்று ஓடிப்போயிற்று; இது, அம்மன்னனுடைய வெப்பநோய் தீருவதற்குச் சம்பந்தரால் பாடப்பெற்ற "மந்திரமாவது நீறு" என்றபதிகம் ஓதிக்கொடுக்கப்படுகிறது; இதைக் கொண்டு போய்க் குழந்தைமீது தோடுடைய செவியனை நினைத்துத் தூவிவிடும்; உடனே வெப்பநோய் நீங்கிக் குழந்தை குணமாகும்" என்று கூறி, ஒரு பொட்டலம் திருநீற்றை அவரிடம் கொடுத்தனுப்புவார். அவரும், அந்தத் திருநீற்றின் வலிமையால் தான் குழந்தையின் வெப்ப நோய் நீங்கிற்றென்று எண்ணுவாரேயன்றி, முன்னர் கொடுக்கப்பட்ட மருந்தின் பயனாகவே நோய் தீர்ந்ததென்று எண்ணமாட்டார். "காகம்உட்காரப் பனம்பழம்விழுந்தது" போல் முன்னர் கொடுத்த மருந்தினால் நோய் தீரும் சமயமும் திருநீறு தூவும் சமயமும் ஒன்று சேர்ந்து இப்படியாயிற்றென்று எண்ணவும் மாட்டார். இனித், திருநீறுகொடுத்தவராவது, "நாளும் கோளும் நம்மை அணுகாதென்பதற்கு ஆதாரமாகவுள்ள கோளறு பதிகத்தை நான் ஓதினேன்; ஆனால் நான்போகிற காரியம் வெற்றி பெறுமா என்பதற்குப் பஞ்சாங்கத்தையன்றோ துணைதேடினேன்; அப்படியிருக்கக், கோளறு பதிகத்தை நம்பாதநான், திருநீற்றுப் பதிகத்தை நம்பி, அதனால் நோய் தீரும் என்று எப்படிக் கூறுவது" என்றும் எண்ணிப் பார்ப்பதில்லை. தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் என்ற முறையில் காரியங்களைச் செய்வதே சமய நெறிக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களின் வழக்கமாகி விட்டது. ஏனெனில், சமய நெறிகள், மக்களை ஒருகுறிப்பிட்ட கட்டுப்பாடான வழியில் நடத்திச் செல்லக்கூடியதாக அமைக்கப்படவில்லை. இதற்குக் காரணம், நம்மவரால் பின்பற்றப்பட்டு வரும் சைவ—வைணவமாகிய இரு சமயங்களும், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான திட்டங்களோடு அமையாமல், அவ்வப்போது எழுந்த மதப் போர்களின்காரணமாக, ஒன்றுக்கு இன்னொன்று தாழ்ந்தது என்றும், சைவம் வைணவத்தைக் காட்டிலும் இன்னின்ன வகையில் சிறப்புடையது என்றும்; வைணவம் சைவத்தைப் பார்க்கிலும் இன்னின்ன வகையில் உயர்வுடையதென்றும்; இப்படியாக ஒன்றுக்கொன்று போட்டிபோடும் அவசரமும் நெருக்கடிகளும் ஏற்படுகின்ற சமயங்களில் எல்லாம், அந்தந்த மதங்களுக்கு வகுக்கப்படுகின்ற திட்டங்கள் முன்னுக்குப் பின் முரணாகவும், பொது அறிவுக்குப் பொருந்தாததாகவும் அமைக்கும் நிலைமை ஏற்பட்டு இத்தகைய இரங்கத்தக்க நிலையை உண்டாக்கி விடுகின்றது. மற்ற மதங்களிலாவது ஓரளவுக்கேனும் சிறிதளவு வரையறை இருக்கும். ஆனால், சைவ—வைணவ மதங்களில்வரையறையோ கட்டுப்பாடோ கிடையாது.

இந்த இரு மதங்களிலும் தான், மனிதன் கடவுளான கதைகளும், கடவுள் மனிதனான கதைகளும் இருக்கின்றன. எத்தனையோ மனிதர்கள் கடவுளராக்கப்பட்டு, மக்களின்வழிபாட்டிற்குரியவர்களாகச் செய்யப்பட்டுள்ளனர். அதுபோலவே எத்தனையோ கடவுளர் தாங்கள் செய்த தவறுகளுக்காகவும், பிறஇன்ப நுகர்ச்சிகளுக்காகவும் மனிதராகப் பிறந்தகதைகளும் உண்டு. இந்த இருவகை நிகழ்ச்சிகளையும் விளக்கிக்கூறும் நூல்கள் தாம், புராண இதிகாசங்கள்என்ற பெயர்களோடு நம்முடைய வழிபாட்டிற்கும் பக்திக்குமுரிய அருள் நூல்களாக நமக்குக் கொடுக்கப்பட்டுமுள்ளன. இவைகளைப்படிப்பதால், கடவுள் யார்? மனிதன் யார்? என்று வரையறுத்துக்கூற முடியாது. இன்று மனிதனாய் இருப்பவன், நாளை கடவுளாகலாம்; அதுபோலவே இன்று கடவுளாய்இருக்கும் ஒன்று, ஏதாவது ஒருகாரணத்தால் நாளை மனிதனாகவும் மாறலாம். இந்த அரிய வாய்ப்புச் சைவ—வைணவ மதங்களிலன்றிவேறெந்த மதத்திலும் கிடையாது.

விறகை அழித்து உண்டான நெருப்பில் விறகும், பாலை அழித்து உண்டான நெய்யில் பாலும் உண்டாவதில்லை; உண்டாக்கவும் முடியாது. ஆனால், இங்கு, மனிதனாக இருந்து கடவுளாக மாறியவன், மீண்டும் மனிதனாகவும்; கடவுளாக இருந்து மனிதனாகமாறியவன்மீண்டும்கடவுளாகவும் மாறலாம் என்று சொல்லப்படுகிறது. மனிதனாக இருந்துகடவுளாகமாறிய ஒருவன், மீண்டும் மனிதனாக மாறமுடியுமென்று கூறுவதற்கும், விறகாக இருந்து நெருப்பாக மாறிய பின், மீண்டும் அது விறகாக மாறுமென்று கூறுவதற்கும் என்ன வேறுபாடு காணமுடியும்? இப்படிப்பட்ட இரண்டுங்கெட்ட கடவுளர் நம்மவருக்கு வாய்த்ததனால் தான், நம்மவரின் சமயநெறிகளும் இரண்டும் கெட்ட முறையில் சொல்லப்பட்டுள்ளன. சைவ சமய நெறிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரையறுக்கப்படாத காரணத்தாலேயே, ஒரே மதத்திற்குத் தலைவர்களாகவுள்ள இருவரில் ஒருவர் கோள் நிலை உண்டென்றும், இன்னொருவர் கோள்நிலைஇல்லையென்று கூறவும் இடம் ஏற்பட்டது. இருவருக்கும் இடையேஉள்ள கருத்து வேறுபாடுகள் மலைக்கும் மடுவுக்கும்போன்றிருப்பினும், அவற்றை, அவர்களைப் பின்பற்றும் அன்பர் குழாங்கள் பொருட்படுத்துவதில்லை. அவர் சொன்னதும் சரி; இவர் கூறியதும் தப்பல்ல என்று இறுமாந்திருக்கின்றனர், எருமை மீது மழை பெய்த மாதிரி. இது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நம் நாட்டில் மதம் தோன்றியகாலத்திலிருந்தே இந்த முறை கையாளப்பட்டு வருகின்றது. எதற்கும்-எந்தக் காலத்திலும் ஒரு திட்டமான "இதுதான் சரி" என்ற முடிவு ஏற்பட்டதேகிடையாது. கடவுளரைப் பொறுத்தவரையில்கூட அன்று தொட்டு இன்றுவரை போட்டிகள் நடந்துகொண்டே இருக்கின்றன. சிவன் பெரியவரா? திருமால்பெரியவரா? என்ற உரையாடல், (வாதம்) இன்றுவரை ஒருமுடிவுக்கும் வர முடியாமல் நிகழ்ந்த வண்ணமே இருக்கக் காண்கின்றோம். இந்த நிலையில் மதக்கோட்பாட்டின் ஒரு பகுதியான "கோள்நிலை" பற்றிய முடிவை எப்படிச் செய்யமுடியும்?

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கோள்நிலை பார்க்கும் வழக்கம் சைவம் வைணவம் ஆகிய இரு மதத்தாராலும் ஒருபடித்தாகவே கையாளப்பட்டுவருவதுதான். கோள் நிலை பார்க்கும் வழக்கத்தைச் சைவர்கள் உண்டாக்கினார்களா? அல்லது வைணவர்கள்தான் உண்டாக்கினார்களா? என்பதை எவரும் திட்டமாகக்கூறி வரையறுக்க முடியாதபடி அவ் வழக்கம் இரு மதத்தாரிடையிலும் புகுந்துவிட்டது. சைவமும் வைணவமும் எத்தனையோ துறைகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், சிற்சில கொள்கைகளில் மட்டும் ஒன்றையொன்றுதழுவியேஉள்ளன. இதற்குக் காரணமென்ன?

இவ்விரு மதங்களையும் உண்டாக்கியவர்களின் நோக்கம், உண்மையாகவே, மக்கள் அனைவர்க்கும் பொதுவான ஒரு நன்மை ஏற்படவேண்டுமென்றில்லாமல், ஒருகுறிப்பிட்ட சிலரின்பிழைப்புக்குவழி தேடுவதையே அடிப்படைக் காரணமாகக்கொண்டு உண்டாக்கப்பட்டதாலேயே இந்தநிலை ஏற்பட்டது. மதத்தின் பெயரால் மக்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்பவர்கள், தங்கள் வாழ்க்கையின் நலனுக்கேற்ப மதக்கொள்கைகளை வகுத்துக்கொண்டனர். இனி, இருமதக்கொள்கைகளுக்கும் அடிப்படைக்காரணம் ஒன்றாயின், அவற்றுட் சில மாறுபட்டும், சில ஒன்றுபட்டும் இருப்பானேன் என்று சிலர் கேட்கக்கூடும். 'வித்தைக்காரர்கள் எல்லாருமே மாஞ்செடி முளைத்துக் காய்க்கும் வித்தையை ஒரு விதமாகவே செய்து காட்டுவார்கள். ஆனால், சில வித்தைகள்மட்டும், ஒரு வித்தைக்காரனுக்குத்தெரிந்தது இன்னொரு வித்தைக்காரனுக்குத் தெரியாததாக இருக்கும். சீட்டு வித்தையில் ஒருவன்ஒருபுதுமை(Trick) செய்து காண்பிப்பான்; இன்னொருவன் வேறொன்றுசெய்துகாட்டுவான்; எனவே இரண்டுக்கும் கூட்டம் சேரும்; பணமும் இரு வித்தைக்காரர்களுக்கும் தாராளமாகக்குவியும். ஆனால் இரண்டுபேருடைய நோக்கமும் பணம் திருட்டுவதே. இது போலத்தான், சைவம் வைணவம் ஆகிய இரண்டு மதங்களும் ஒரு சிலர் பிழைப்பையே அடிப்படையாகக்கொண்டதால், அவர்கள், தங்களுடைய பிழைப்புச் சரிவர நடக்க வேண்டுமென்பதற்காக, "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குஇலாபம்" என்பதுபோல், மக்களுக்குள் பிரிவை உண்டாக்கித் தங்களுடையவாழ்க்கைக்கு வழி தேடிக்கொண்டனர்.

சைவம்—வைணவம் ஆகிய இரண்டு மதங்களும் ஒரு சிலரின் பிழைப்புக்கென்றே உண்டாக்கப்பட்டனவென்பதற்கு, அவ்விரு மதக்கோயில்களிலும் நடக்கும் பூசைகளும் திருவிழாக்களும் அவற்றிற்குச் செலவாகும் பொருள்களுமே போதிய சான்றாகும். வேறு எந்தமதக் கோயில்களிலாவது சோறும்—கறியும்—தேனும்—பாலும்—நெய்யும்—பழமும் படைக்கப்பட்டு, அவற்றை ஒரு குறிப்பிட்ட இனம்மட்டுமே உண்டு கொழுத்துத் திரிவதைப் பார்க்கமுடியுமா? நாட்டில் எத்துணைப் பஞ்சமேற்பட்டாலும், அதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல், கோயிலுக்குஆறுகாலப் பூசையும் அதற்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் கொடுத்துப் பாழ்படுத்தும் நாடும் மதமும் வேறு எங்கேனும் காணமுடியுமா? காலைமுதல் மாலைவரை கடுவெயிலிலும் விடாமழையிலும் நின்று உடலலுக்கப்பாடுபடும் பாட்டாளிக்குக் கட்டத்துணியும் குடிக்கக்கஞ்சியும் இல்லாமல் இருப்பதும், வெயிலும் மழையும் எப்படி இருக்கும், அவைஎன்னசெய்யும் என்பதையே தெரிந்துகொள்ளாதபடி வீட்டுக்குள் இருந்து வேடிக்கை பேசிப் பொழுது போக்குபவர்களுக்கு வேளை தவறாது அறுசுவை உண்டியும் பதினெட்டு முழப்பட்டாடையும் வைர ஒட்டியாணமும் கிடைக்கக்கூடிய வசதி இருப்பதுமான நிலைமை, நம்நாட்டுமதக் கோட்பாட்டினாலன்றி, வேறெதனாலாவது ஏற்பட்டதென்று எவரேனும் கூற முடியுமா? ஒரு இனம் உழைக்கவும் அந்த உழைப்பைக்கொண்டு இன்னொரு இனம் உடம்பசையாது வாழவுமானநிலை ஏற்பட்டதற்கு மதத்தையன்றி வேறெதனை யாவது காரணமாகக் கூறமுடியுமா? கோள்நிலை பார்த்துக் குணகுணம்கூறித் தட்சிணை பெற்றுத்தக்க வாழ்வு நடாத்தும் எத்தனைப் பஞ்சாங்கப் பார்ப்பனர் நம் நாட்டிலுள்ளனர்? அவர்களின்

(4-ம் பக்கம் பார்க்க)


## விளம்பரம்

### காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு

S. C. Co. P. 23 & 24 of 1946

1. கோமளியம்மாள்,
2. கோவிந்தம்மாள்,

மனுதாரர்கள்.

காஞ்சிபுரம் டவுன் சிங்கப்பெருமாள் கோயில் தென்னண்டைமாடவீதி 6-நெ. வீட்டுக்காரர் காலஞ்சென்ற தாசரிசெட்டியார் 5—1—1946ல் எழுதிவைத்த உயில் முன்னிலைக்கும், வார்சு முன்னிலைக்கும், சென்னை ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் சொஸைட்டியில் 123929 பாலிஸிக்காகச்சேரவேண்டிய தொகையை வசூலிக்க ஷையார் மூத்த பார்யாள் கோமளியம்மாள் தனக்கு வார்சு சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்றும் ரெட்டிப்பேட்டை ராமசாமி செட்டி எழுதிக்கொடுத்திருக்கும் அண்டிமான்டு பாக்கியை வசூலிக்க ஷையார் மனைவிகள் கோமளியம்மாள், & கோவிந்தம்மாள் இருவருக்கும் சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேண்டுமென்று மனுக்கள் கொடுத்து, நோட்டீசு உத்தரவாகி 12—6—1946 தேதிக்கு வாய்தாபோட்டிருக்கிறது.

காஞ்சிபுரம், 24-4-46. } Sd. N. S. Bashiam Iyengar, மனுதாரர்களின் வக்கீல்.

# ★ வால்டயர் ★

—[வேலன்]—

பழைமை இறக்கும் நேரத்தில் புதுமை பிறக்கின்றது. கால வெள்ளத்தில் பழைமை அடித்துச் செல்லப்பட்டுப்புதுமைபூக்கின்றது. புதுமையும் வெள்ளத்தின் வேகத்திற்காய்ந்து கருகிப்பழைமையாகிஅழிகின்றது. மீண்டும் புதுமை. இது உலகியல், அறிவுவளர்ச்சி ஆராய்ச்சியாளர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. அரசியல்உரிமைகள், துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களினல்காப்பாற்றப்பட்டுள்ளன. பகுத்தறிவு,நாத்திகர் என்று பழிக்கப்பட்டவர்களினல் புகுத்தப்பட்டுள்ளது. அரசனை 'ஏன்,' என்று கேட்பது இராசத்துரோகம். அர்ச்சகனை 'எப்படி' என்று கேட்பது 'பாபகாரியம். அரியாசனமும் பலிபீடமும் இரட்டைப் பிறவிகள். மதகுரு இல்லையேல் மன்னன் இல்லை. மன்னன் இல்லையேல் மதகுரு இல்லை என்ற நிலை. இரு உலகங்கள் இவர்கள் ஆளுகையில். மக்கள் ஒருவரின் வரிச்சுமையையும் மற்றவரின் புராணக்குப்பையின் பளுவையும் சுமக்கின்றனர். அவர்கள் இருவரும் ஆண்டவனின் அம்சம். மக்களைக் காக்கவும் தூய்மைப்படுத்தவும் ஆண்டவனல் அனுப்பப்பட்டவர் என்று கருதப்படுகின்றனர். அவர்களின் சொல்லே சட்டம். மறுத்தால் மரிக்கவேண்டியதுதான். உலகில் இந்த நிலை இருந்துப் சேற்றில்செந்தாமரைபோல் அவ்வப்போது அறிஞர்கள்தோன்ருமலில்லை. அறிஞன் எண்ணத்தின் எல்லையை அதிகப்படுத்திப்பயமென்னும்'பாஸ்டைல்' சிறையைத் தரைமட்டமாக்கி,எண்ணக்கடலில் புதிய புதிய உலகைக் கண்டு புதுமையை உலகிற்குத் தருகின்ருன். ஆரவாரம், பதவி இவைகளிற் பற்றின்றி உண்மையையும் இன்பத்தின் இருப்பிடத்தையும் காண ஆசைப்பட்டு அலைந்து, தான் கண்டவற்றை மக்கள் பயன்பெறுமாறு பகர்கின்ருன். இவ்விதமுறை இல்லாமலிருந்தால், இன்று இவ்வுலகு நாகரிக மற்றவர்களின் இருப்பிடமாக இருந்திருக்கும். அறிஞர்கள் கொடுமையெனும் கொடிய விலங்கை வீழ்த்தி மடைமையை மாய்த்த வீரர்கள். அவர்களே புத்துலகை உண்டாக்கிப் பகுத்தறிவைப் புகுத்தி மாநிலத்தோர் வாழ வழி வகுத்துத்" தந்தவர்கள். அவ்வீரர்களின் படை முன்வரிசையில் உள்ளவர் வால்டயர்.

1694-ம் ஆண்டு நவம்பர் 21 ஞாயிறன்று வால்டயர் பிறந்தார். அன்று தோன்றிய அக்குழவி, வாழும் என்னும் நம்பிக்கையைத் தருவதாய்த்தோன்றவில்லை.ஆதலால் அதை அதிசீக்கிரம் ஞானநீராட்டுவதில் கருத்துடையவராய் இருந்தனர்பெற்றோர். அந்தக்குழவிதான், பிற்காலத்தில் தன்போன்ருர்களின் உண்மை உருவை உலகிற்கு எடுத்துக்காட்டப்போகிறதென்றுஞானநீராட்டிய குரு கனவிலும் கருதியிருக்கமாட்டான். தூய்மைப்படுத்தப்பட்ட அக்குழந்தைக்கு "பிராங்கோ மேரி அரோ" (Francois Marie Arouet)என்று (வால்டயருக்கு) பெயரிடப்பட்டது. பிராங்கோவின் தகப்பன் ஒர்மாதாகோவில் அதிகாரி. கருத்துக் கெட்டாமல் ஒர்கடவுள் இருக்கின்ருன் என்றுநம்பி ஊதியம்வாங்கும் நேரத்தைத்தவிர மற்றவேளைகளில் மதத்தைப்பற்றிக் கவலைகொள்ளாமல் வாழ்ந்துவந்தவர். வால்டயர் வழக்கறிஞர் ஆகவேண்டுமென்பது அவரின் அவா. பிராங்கோ பத்தாவதாண்டிலே கத்தோலிக்கப் பாதிரியார்கள் நடத்திவந்த "லூயி லீகிராண்ட்" (Louis Le Grant) என்ற கல்லூரியில்சேர்ந்துஏழாண்டுகள் பயின்ருர். அவர் அங்கு கற்றது ஒரு சிறிது கிரீக், பன்மடங்கு லத்தீன், எண்ணற்ற கவைக்கு உதவாதவைகள் என்று கூறியுள்ளார். அவரின் பதினேழாம் ஆண்டில் இலக்கிய ஆராய்ச்சியில் தன்வாழ்நாளைக் கழிக்கஎண்ணினர். 1713ம் ஆண்டில் பிராங்கோ ஒரு நங்கையைக் காதலித்தார். மங்கையின் மாதா இவர்களின் காதலுக்குத் தடையாய் இருந்தாள். காதலனல் காரிகையைச் சந்திக்கச் செய்யப்பட்ட உபாயம் கண்டுபிடிக்கப்பட்டுக்கடுமை அதிகமாயிற்று. அந்த நேரத்தில் வால்டயர் அப் பெண்மணிக்கு "உன்னுடைய நிலையை உன் தாய்க்கு வெளிப்படுத்தி அவளின் கோபத்திற்கு ஆளாகாதே. அவளின் திறமையை நீநன்கு அறிவாய்,' உன் அநுபவத்தால். ஆதலால் உன் மனத்தை அவளிடம் முற்றிலும் மறைத்துவிடு. என்னை வெறுப்பதாகவும் மறந்து விட்டதாகவும் அவளிடம் கூறு. அதே நேரத்தில் உனக்கு என்மேலுள்ள அன்பை உன் மனதிற்குள்ளேயே வளர்ப்பாயாக" என்று வரைந்திருந்தார். இச்செய்தி வெளியானதினல் பிராங்கோ ஒன்று நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் அல்லது சிறைசெல்ல வேண்டும்என்ற நிலை ஏற்பட்டது. ஆதலால் சட்டம் பயில ஒப்புக்கொண்டு அந்தச்சிக்கலினின்றும் தப்பினர். சிறிது நாள் பயின்ற பின் சட்டக் கல்வியின்பால் வெறுப்பேற்பட்டுக் கவிதைகள் இயற்றுவதில் முனைந்தார். மதத்தைப் பற்றியோ அரசாங்கத்தைப்பற்றியோ அவர் அப்போது அறிந்திருக்கவில்லை. நாடகங்கள் எழுதுவதில் நாட்டம்கொண்டிருந்தார். இந்த நேரத்தில் அவர்எழுதிய ஒரு கவிதைபுரட்சிகரமானதென்று குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டார். அங்கிருந்துதாய்நாட்டிற்குத் திரும்ப அநுமதிகிட்டி, வந்த சிறிது நாட்களுக்குள் பாஸ்டைல் சிறைக்குள் தள்ளப்பட்டு ஓராண்டு கழித்தார். அந்தப்பாஸ்டைல் சிறையில்தான் பிராங்கோ மேரி அரோ தன் பெயரை வால்டயர் என மாற்றிவைத்துக்கொண்டார்.

வால்டயர் என்றவுடன் அறிவு உலகம் உள்ளம்பூரிக்கும். வைதிகத்தின் வயிறு கலங்கும். நாட்டிலே மழையில்லை. மக்கள் வாடிய முகத்துடனே வானை நோக்கியுள்ளனர். அந்த நேரத்தில் தோன்றும் மாரியின் சின்னம் மக்கட்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதே நேரத்தில் காசநோய்க்காரன் கவலைப்படுகின்ருன், ஈரம் ஏற்பட்டால் இருமல் வருமே என்றுபயந்து "ஏன் இந்தப் பாழும் மழை வருகின்ற"தென்பான். அதுபோல்தான் மதகுருக்கள் எண்ணுவார்கள், ஏன் வால்டயர், ரூசோ, சன்யாட்சன், இங்கர்சால் தோன்றினர்கள் என்று. அவர்கள் அஞ்சும்படி வால்டயர் செய்த செயல்கள் யாவை? மனிதன் மனிதனகவே வாழவேண்டும், சுயமாகச்சிந்தனைசெய்யவேண்டும். எவற்றையும்ஆராயவேண்டும். ஒருவன் மற்றவனைப்பிறப்பினல் உயர்ந்தவன் என்று கூறிக்கொண்டு, மற்ற வகைகளினலும் துன்புறுத்தவோ, அடிமையாக்கவோ கூடாது. அன்பையும் ஆண்டவனையும், பலத்தினலும் பயத்தினலும் ஏற்படுத்த முடியாது, இவைகள் வால்டயரின் இலட்சியங்கள். இவ்வித சிறந்த நோக்கங்களைக்கொண்டிருந்த ஒருவரின் பெயரைக் கேட்டவுடன்மதகுருமார்கள் கலங்குகின்ருர்கள் என்ருல், அவர்கள் காச நோய்க்காரர்கள் என்பதைத் தவிர வேறென்னகாரணம் இருக்க முடியும்?

பதினேழாம் நூற்ருண்டில் ஐரோப்பாவிலே ஏசுவின்மார்க்கம் எங்கும் பரவியிருந்தது. இவ்வன்பு மார்க்கத்தைத் தழுவிய அரசர்களால் சட்டங்கள் செய்யப்பட்டு அறிவும் ஆத்மஞானமும் உள்ளவர்கள் என்ற கருதப்பட்ட குருமார்களினல் ஆமோதிக்கப்பட்டன. இருநூற்று இருபத்திமூன்று குற்றங்கள் தூக்குத்தண்டனை கொடுக்கக்கூடியவைகளாகஇருந்தன. இப்புனிதமானவர்களினல் ஆளப்படும் நாட்டிலுள்ள ஒவ்வொரு நீதிமன்றத்திலும் சித்திரவதை செய்யும் இடங்களிருந்தன. எழுத்தாளர்களின் வாழ்க்கை, மன்னன், பிரபு, குரு இவர்களின் விருப்பையோ, வெறுப்பையோபொறுத்திருந்தன. நீதி வழங்குமிடங்களில் நிரபராதிகளைச் சிக்கவைக்கும் பொறிகள். நோய் வந்தால் கூப்பிடுவது வைத்திய நிபுணர்களையல்ல, மந்திரம் கற்றிருந்த குருவை. அவர் மந்திரித்து கொடுக்கும் சிறு காகிதத்துண்டே சகலரோக நிவாரணி. அதைக் கொண்டு சாதிக்க முடியாததே கிடையாது. மாதாகோயில் மணி, உலகில் புயல், மின்னல்,இடி இவைகளை உண்டாக்கும் சாத்தானைவிரட்டியடிக்கும். அம் மணிசெய்யும் அற்புதங்கள் அனேகம். காட்டேரி, முனி, பைசாசம் முதலியன இருக்கின்றனவென்று நம்பப்பட்டது, ஸ்பெயின்,போர்ச்சுக்கல், இங்கிலாந்து, இத்தாலி, ஜர்மனி, அமெரிக்கா, பிரான்சு, எங்கும் மதத்தின் பெயரால் கொடுமைகள்எண்ணற்றவை நடத்தப்பட்டுவந்தன. எங்குபார்த்தாலும் மூடப்பழக்கவழக்கங்கள். இந்தநிலைஐரோப்பாவில்எப்போது? மனிதன் காட்டில் வாழ்ந்த நாட்களிலல்ல, கற்களைத்தட்டி நெருப்புண்டாக்கிய காலத்திலல்ல, விலங்குகளையே விருந்தாகக்கொண்ட நாட்களிலல்ல, நாகரிகம் இன்னதென்று தெரியாமலிருந்த காலத்திலல்ல, ஏசுவின் அன்பு மார்க்கம் ஏற்பட்டுப் பதினறு நூற்ருண்டுகட்குப்பிறகு! யாவரும் அவரின் பக்தராயிருந்த காலத்து! மேலும் வியப்பிற்குரிய செய்தி என்னவென்ருல், இந்த அன்பு மார்க்கத்தைக்காப்பாற்றவே இத்தனைக் கொடுமைகள், ஏமாற்று வித்தைகள்!!

சிறையினின்று வந்த வால்டயர், அரசனையும் ஆராதனைக்காரர்களையும் தாக்கி எழுதியதின் விளைவாக நாடுகடத்தப்பட்டு இங்கிலாந்து சென்ருர். அங்கு போப், (Pope) யங், (Young) செஸ்டர்பீல்ட் (Chesterfield) தாம்சன் (Thomson) ஸ்விப்ட் (Swift) புல் (Bull) கான்கரீவ் (Congreeve) முதலியவர்களுடன் தொடர்பு கொண்டார். மதஏடுகளைப்புரட்டி ஆராயத் தொடங்கினர். மக்கட்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பை ஆராயுங்கால், சுயசிந்தனை சிறிதுமின்றி யாவரும் செயலாற்றும் பரிதாபகரமான நிலையையும், நல்ல பண்புகளைவிட அலுவல் உடைஅதிகாரிப்புப்பெற்றிருப்பதையும், வாழும் மனிதர்களின் உரிமைகளைவிடச், சிலைகளுக்கும் சிதைந்துபோன எலும்புகளுக்கும் அதிக சலுகை காட்டப்படுவதையும் அறிந்து தன்திறமை முழுவதையும் உபயோகித்து வேஷதாரிகளைத் தாக்கினர். சரித்திரம், சான்றுகளுடன் சாற்றும் உண்மையை யாவரும் உணரும்படி உரைத்து,நியாயமாகஇருப்பதற்கும், வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமாய் இருப்பதற்கும் மதத்தின் உதவியை நாடிய மக்களின்நிலையை நினைத்து அவர்கள்பால் பரிதாபப்பட்டார். கதோலிக்கர்களும், பிராடஸ்டண்டுகளும் வால்டயரைத் தூற்றுவதில் ஒத்துழைத்தனர். வால்டயர் வீசிய குண்டு அவர்களின் அஸ்திவாரத்தையே அலறச்செய்தது. அரசன்முதற்கொண்டுஆண்டிவரை, பட்டதாரி முதற்கொண்டு பாமரர்வரை, வயோதிகன் முதற்கொண்டு வாலிபர்வரை எவரிடத்தும் எங்கும் மூடப்பழக்கவழக்கங்கள் மலிந்துகிடந்தன. ஆதலால் வால்டயர் எழுத்துத் திறமையைப் பயன்படுத்திப் பகுத்தறிவு வளர்க்கும் நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் இயற்றி மக்களைச் சீர்திருத்தும் முறையில் ஈடுபட்டார். ஐரோப்பாவில் எம்மூலையிற் சிறு அநீதியோ அடக்குமுறையோ நடந்தாலுங்கூட வால்டயரின் கருத்தில் படாமல் போகாது., உடனே கண்டனக் கருத்துகளை எரிமலைப்போல்கக்கும் வால்டயரின் பேனு. அதுமட்டுமல்ல, அவர் கேலிச்சித்திரங்கள் வரைவதில் கைதேர்ந்தவர். அவருக்குக்கிடைத்த வாய்ப்புகளை நழுவவிடாமல் இடப்பொருள்காலத்திற்

அடுத்த பக்கம் பார்க்க

தந்தி:- "புருமார்க்" திருச்சி.







உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
84, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.



ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ 4 ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. ). வேறு.

ஜெயராம வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.


## வால்டேயர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

தேற்பமுறையைமாற்றிப்,பகுத்தறிவெனும் ஒரேசாக்கை மக்கட்கு வழங்கினர். சரக்கு நேர்மையாக வு ர. அறிவுக்குவிருந்தர்கவும்இருந்த காரணத்தால் நன்குவிலையாயிறறு. தன் ஆணித்திறமான ஆதாரங்கள் கொண்ட ஆராய்ச்சிஅறிவின் பலத்தையும் அதனல் கிடைத்த பண பலத்தையும் துணைகொண்டு படைபலங்கொண்ட மன்னர்களையும், மக்களின் மதியீனத்தைத் துணைகொண்டு மதிப்புப்பெற்ற குருமார்களையும் தாக்கினர். எல்லாக்கலைகளையும் அறிந்திருந்தார்.கிரேக்கநாட்டுத் தத்துவஞானி அரிஸ்டாடில் (Aristotle) ஆண்களைவிடப் பெண்களுக்குப் பற்கள் அதிகம் என்று உரைத்ததைத்திருப்பித்திருப்பிக்கத் தோலிக்க விஞ்ஞானிகள் கூறிவந்தனர். மற்றவர்களும் அவர்கள் அப்படிச்சொல்லுகின்றர்களே என்று பேசுவதில் திருப்தியடைந்திருந்த நேரத்தில், வால்டயர் அது உண்மையா என்றறியப் பற்களை எண்ணிப்பார்த்தார். எதையும் ஆராய்ந்து அறியாமல்விடுவது அவரின்வழக்கமல்ல. அப்பொழுதஐரோப்பாவிலே மூன்று சக்திகள் இருந்தன— அரியாசனம், பலிபீடம், வால்டயர்—இவைகள் மிகைப்படுத்திக்கூறுவதாகாது. "ஆழமான கருத்து, கற்பனை, மேன்மைத்தன்மை, பகுத்தறிவு, உண்மை, தத்துவஞானம், கலை, உற்சாகம், உறுதி, தூய்மை, திறமை ஆராய்ச்சி இவைகளில் உங்களுக்கு விருப்பமிருக்குமாகில் வால்டயரிடம் காண்பீர்களாக" என்று கேதே (Coethe) என்ற ஜெர்மன் நாட்டறிஞன் கூறியுள்ளான்.

அயல் நாட்டில் 27 ஆண்டுகள் கழித்தபின், பாரிஸ் நகரத்துக்கு வால்டயர் திரும்பினர். எந்தஅரசகுடும்பத்திற்கும் அதுவரை கிட்டாத, அவ்வளவு அமோக வரவேற்பு. அவர் எழுதிய நாடகம் ஒன்று அவர் முன் நடித்துக்காட்டப்பட்டது. மன்னனும் மதகுருமார்களும் அப்பொழுது அழிந்துபோகவில்லை, இருந்தனர். என்ன செய்ய முடியும்? மக்களின்உணர்ச்சியென்ற மின்சாரத்தின் உதவிகொண்ட அதிக பிரகாசம் உள்ள மின்சார விளக்கு வால்டயர். அவ்விளக்கிற்கு விலைதேட முயன்றால் மின்சார ஷாக் (Shock) அடித்து அழியவேண்டியதுதான்; அதனல். வாளாவிருந்தனர். சகல சௌகரியங்களுடன் பிரான்சு நாட்டிலே வாழ்ந்து, நாட்டுமக்கள் ஒவ்வொருவரின் மனதிலும் வசித்தார். 1778 மேமாத இறுதியில் வால்டயர் மரணப்படுக்கையில் இருப்பதாகக் கூறப்பட்டது. அவரின் ஆன்மா ஆண்டவனின் அடியை அடையவேண்டுமென்று கருதிய உறவினர் ஒருவர், பாதிரியை அழைத்து வந்தார். பாதிரிகளின் செயல்களைக் கண்டித்துத் திருத்த எண்ணினரேயொழிய அவர்களைவெறுக்கவில்லை, மனிதர்களென்ற காரணத்தால். வால்டயரினல் வந்தனம் செலுத்தப்பட்ட பாதிரி சிறிது நேரம் பேசியபிறகு ஏசுவின் தெய்வீகத் தன்மையை ஒப்புக்கொள்கின்றீரா எனக்கேட்டவுடன், "என்னை அமைதியுடன் இறக்கவிடுங்கள்" என்று கூறிவேறுபக்கம்திரும்பிப்படுத்துக் கொண்டார். இறுதி நேரத்தில் வெற்றி கொள்ளலாம் என்று எண்ணிவந்த பாதிரி ஏமாற்றத்துடன் திரும்பினர்.

உவாக்கினீர் (Wagniere) 1778 மேமாதம் 30-ம் தேதியன்று இரவு 11¼க்கு, வால்டயர் இறந்தார் என அறிவித்தது. கரைகளின் இருபக்கங்களிலும் செழிப்புடையமரங்கள் உள்ள அமைதியான ஓர்நதியைப்போல் இன்னலின்றி வாழ்க்கையின் முடிவாகிய அலையற்ற இயற்கையென்னும் கடலில்கலந்தார்.

பிரான்சுநாட்டிலேஎந்தப்பாதிரி, மனிதனின் உரிமையைக்காக்கமுன் வந்தான்? எந்தப்பிரபு ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தான்? எவன், சந்தேகப் பட்டவர்களின் சங்கடத்தைத்தவிர்க்கவந்தான்? தூக்குத் தண்டனை கொடுக்கக்கூடிய 223 சட்டங்களை எதிர்த்துப்போராடியவன் எவன்? மரச்சட்டத்தில்பொருத்தி வதைக்கப்படும் மனிதனைப் பார்த்து எந்த அர்ச்சகன் இரங்கினன்? பிரான்சு நாட்டிலே ஓர்சுதந்திரவாதி மரியாதை செலுத்தவோ, கண்ணீர் சிந்தவோ யோக்கியதை உள்ள ஓர் அர்ச்சகனின் சமாதி உண்டா? அவர்கள் வால்டயரை இகழ்ந்து கூறுவதா? பழிப்பதா? அறிவுஉலகம் அதை ஏற்குமா? ஐரோப்பாவில் மட்டும் வால்டயர் வாழ்ந்து இறக்கவில்லை. மூடப் பழக்க வழக்கங்கள் உள்ள எந்த இடத்திலும் வால்டயர்கள் இருக்கின்றர்கள், பாஸ்டைல்கள் உள்ள இடத்தில் வால்டயர்கள் வாழ்கின்றர்கள் அவைகளை தகர்த்தெறிந்து வெற்றி கொள்ள.

## பாரதிதாசன் நிதி

★

இவ்வாரம், பாரதிதாசன் நிதிக்காகத் "திராவிட நாடு" காரியாலயத்திற்குப் பணம் அனுப்பியவர்களின்விபரம் கீழே தரப்படுகிறது:-

| | |
|---|---|
| சிங்கப்பூர் பாரதிதாசன் நிதிக்கமிட்டியார் ரூபா | 3292 12 0 |
| கோலாலம்பூர் பாரதி தாசனநிதிக்கமிட்டியார் | 1601 0 0 |
| சிலாங்கூர் மருத்துவ சங்கத்தார் | 501 0 0 |

காரைக்குடி இராம— சுப்பையா மூலம் வசூலானவிபரம்:— பா. ச. வே. பெத்தண்ணநாடார் ரூ 15–0–0; என். ஆறுமுகம்பிள்ளை 31–0–0; பி.எல்.பி. இராமசாமி 10–0–0; காரைக்குடி புதுமைப் பதிப்பகம்11–0–0;புதுக்கோட்டை லெ. சோமசுந்தரம் 25–0–0; புதுக்கோட்டை பி. அரங்கசாமிநாயுடு 20–0–0; புதுக்கோட்டை எம். பரமசிவம்பிள்ளை 10–0–0; புதுக்கோட்டை அ. கு. சி.சிவசுப்பிரமணியமுதலியார் 10-0-0;காரைக்குடி மணிலால் கம்பெனியார் 5–0–0; காரைக்குடி சு கு. ம. மெய்யப்பசெட்டியார் 5–0–0; கோனப்பட்டு சொ.அழகப்பச்செட்டியார் 5–0–0; காரைக்குடி அ. மெ. அ. மெய்யப்பசெட்டியார்5-0-0; காரைக்குடி அ. ழ அருணசலம்5–0–0; காரைக்குடி பாபவிநாசநாடார் 5–0–0; புதுக்கோட்டைடி.என். கோவிந்தராசுலு 5–0–0; ஒருநண்பர் 5–0–0; ஆத்தங்குடி ஏ எல். கே. ஆர். சுந்தரேசன் 5–0–0; குறிப்பு:- தோழர் இராமசுப்பையாமூலம் வசூலானரூபா177–0–0ல செலவபோக மீதி ரூபா 156–0–0மட்டும் என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

பொளூர்த்தோழர் கா. சுப்பிரமணியம்மூலம்:— கா. சுப்ரமணியம் 5–0–0; ஏ. பி. பாலசுப்பிரமணியம்5–0–0; எஸ். வி. இராகவன் 5–0–0; சிறுவள்ளூர் அப்பாவு 3–0–0;எஸ்.சுப்பிரமணியம்2–0–0; ஆகரூபா 20–0–0

திருச்சித்தோழர் கே கே. சாமிமூலம்:- கே. கே. சாமி5–0–0; எஸ். வி. கிருஷ்ணன் 2–0–0; டி ஆர் சுப்பராயலு2–0–0; மு. கனகசபாபதி1–0–0: என். ஏ. சுப்பையா2–0–0; பி. ஏ கிரி10–0–0; ஆக ரூபா22–0–0

நிலக்கோட்டைத்தோழர் துரைராசன் மூலம்:—எஸ்.அமிர்தலிங்கம்3–8–0;துரைராசன்2-0-0; ஆர். சுவாமிராம் 1-0-0; பி. பொன்ராமன்1- -0; ஏ. இராமசாமி 1-0-0; மற்றும்நண்பர்கள்1-8-0; ஆக ரூபா 10-0-0

திருப்பூர்த்தோழர் ஜி தேவராசன் ரூ 5-0-0; சென்னை பாலுஸ்டோர்ஸ் எஸ். பாலசுந்தரம்5-0-0; சென்னை ஜி. பி. ஒ. கிளார்க் தோழர் கே. இராசமாணிக்கமும் நண்பர்களும்ரூபா 10-0-0;

திண்டுக்கல் சக்தி நாடகசபையார்:— ஒரு ரூபா தந்தவர்கள்.— இரத்தினம் வேலாயுதம், காச்சியப்பன். கிருஷ்ணமூர்த்தி இரத்னம் ஆதிமூலம், மாணிக்கம் செல்லமுத்து, சீனுவாசன், நாராயணபிள்ளை, ஆறுமுகம் வேலய்யா,ராஜுலு வடமலை தர்மராசன்,பரமார்த்தலிங்கம். பனிரண்டணு தந்தவர்கள்:— சுப்பிரமணியம், ஆழ்வார், அருணு. எட்டணு உதவியவர்கள்:— குப்புசாமி, மகாதேவன், வடிவேல், இராசசேகரன், கண்ணன், சுப்ரமணியம், கிருஷ்ணன், சீனுவாசன், இராசப்பா, கிருஷ்ணமூர்த்தி நாராயணன், சுந்தரராசு, பன்குன்னிநாயர், பாண்டுரங்கன், துரைராசு, சுப்ரமணியன், சீனுவாசன், பாண்டியன்,கோபாலகிருஷ்ணன், நாராயணசாமி, நடராசன், இராமகிருஷ்ணன், கோவிந்தன், கோபாலன், கந்தசாமி, குருசாமி, குட்டப்பன், அப்பு, சீனுவாசன், சுப்பையா,கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், சுந்தராம்பாள், கஸ்தூரிடாய், இரண்டு ரூபா தந்தவர் ஜி. தர்மராஜன். ஆக ரூபா 37—0—0

வேறு, எட்டணு அனுப்பியவர்கள்:- சிவராம்பேட்டைசாமி,மாரியப்பன்.வீராசாமி ஞானசுந்தரம்.சோமசுந்தரம்; சென்னை துரைஅரசன், பார்த்தசாரதி, தீனதயாளு, கபாலி, கோவிந்தராசன், சீனுவாசன், நடராசன், உலோகநாதன், தேவராசன்அருணசலம்,சுப்பிரமணியன், ஏகாம்பரன், முருகேசன், திருநாவுக்கரசு, மோகனகணேசன்,சுப்ரமணியம்,இராசா, சுப்ரமணியன், ஞானப்ரகாசம், கோதண்டபாணி, குப்புச்சாமி, சமரன், குப்புச்சாமி, இராமமூர்த்தி, இராமகிருட்டினன், சேதுபதி, வீரராகவன், விநாயகம், குப்புச்சாமி, அண்ணமலை, கோவிந்தராசன், இராமன், கண்ணன், இராஜ், திருநாவுக்கரசு, தனபாலன்,பாலசுப்ரமணியன், கண்ணன், பார்த்தசாரதி, செல்வராஜு,கோவிந்தன், நரசிங்கராவ், முருகையன், ஒருஅபிமானி, வடிவேல், சம்பந்தம், தனபால், பார்த்தசாரதி, நீலகண்டன், வேணுகோபாலன், லோகோபகாரம், கன்னையலால், சந்திரசேகரன், சுந்தரசேன், நரசிம்மன்;

நாலணு அனுப்பியவர்கள்:- சென்னை வடிவேல், இராமச்சந்திரன். இராசய்யா, சாரங்கபாணி, உலோகநாதன், மணி,சச்சிதானந்தம், நவநீதம், ஜெகந்நாதன், விவேகானந்தன், செல்வநாயகம் ஆகியவர்கள்.

**சி. என். அண்ணுத்துரை**
பொருளாளர்

---

## "பழைமை மோகம் கொண்டவர்கள் ஒழிக"

●

"இந்துமாதர்கள் தனித்துவாழவும், வாழ்க்கைக்குத் தேவையான ஜீவனும்சஉரிமைபெறவும்அருகதையுடையவர்கள் என்பதற்காகடாக்டர் தேஸ்முக் அவர்கள் கொண்டுவந்த மசோதா அங்கீகாரம் பெற்றதுகுறித்துநான் அகமகிழ்வுகொள்ளுகிறேன். இந்து மாதர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. மனையின் தெய்வமாக இந்துமாதர் கருதப்படுகிறர்கள். ஆனல் உண்மையில் அரசாங்கத்தின் அநியாயச் சட்டத்திற்கு அடிமையாகவே இருக்கின்றர்கள். மதத்தின் பெயரால் உயர்ந்த பொறுப்புகளை வகிக்கவும், நியாயமானஉரிமைகளைஇழக்கவும்இச்சட்டம்அவளைஉள்ளாக்குகின்றது. பன்னெடுங்காலமாகப் பெண்ணினம் இன்னல்களை அனுபவித்து வந்திருக்கிறது. மனித சமுகத்திலுள்ளஒவ்வொருவரின்அடிப்படை உரிமைகளான, சமுதாய பாத்யதைகளும் சட்டநியாயமும் மறுக்கப்பட்டே வந்திருக்கிறது. பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடங்கலாகவே இந்து சமுதாயம் இதுகாறும் இருந்துவந்திருக்கிறது. இதனல் தேசியமுற்போக்கும்முன்னணி வாழ்வும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்வில் இன்பமிழந்து துன்பம் நிறைந்தவர்களாகஇருக்கும் மாதர் சமுகத்திற்கு டாக்டர் தேஸ்முக் அவர்களின் சட்டம்பெரும் க்ஷேமத்தைக் கொடுக்கும், இந்தியா சுதந்திரநாடாக உன்னத வாழ்வு நடத்தவேண்டுமானல், இந்தச் "சட்டத்தை ஆக்ஷேபிக்கும் பழைமை மோகங்கொண்ட பேர்வழிகளை நாம்ஒழிக்கமுன்வரவேண்டும்" என்று விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர்கள்.

———




கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணரப்பேட்டை,சென்னை.


Edited Printed and Published by C N. Annadurai, M.A., at "Dravida Nadu Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.